# செயற்கல்வி

## வகுப்பு மூன்று



कार्यशिक्षण इयत्ता तिसरी (तमिळ माध्यम)

# டெலி-மானஸ் ஹெல்ப்லைன்

**Tele MANAS (Tele Mental Health Assistance and Networking Across States)**

**(14416/1800-89-14416)**

தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலி-மானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப் படுகிறது. டெலி-மானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண். மூலம் 24 x 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலி-மானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.

## மனோதர்பன் உதவி

**மனோதர்பன் உதவி எண் : 8448440632** வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப்பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.

அரசு தீர்மானம் எண் : அப்யாஸ்-2116 (ப்ர எண் 43/16) எஸ்.டி. - நாள் 25.04.2016 இன் படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் 13.04.2026 ஆம் நாளின் கூட்டத்தில் இப்பாடநூலை 2026-27 கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

# செயற்கல்வி

## வகுப்பு மூன்று



மகாராஷ்டிர மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆராய்ச்சிக் கழகம், புனே - 4.

அருகில் உள்ள கட்டத்தில் காணப்படும் விரைவு குறியீட்டை (Q.R. Code) உங்கள் ஸ்மார்ட்போன் மூலம் ஸ்கேன் செய்வதன் மூலம், டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலின் உட்பிரிவுகளுக்கு தொடர்புடைய காட்சி, ஒலி மற்றும் காணொலி வடிவங்களிலான கற்றல் கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு :
2026

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே - 411004.

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்த பகுதியையும் மகாராஷ்டிரா மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்யக்கூடாது.

**✻ செயற் கல்விக்குழு உறுப்பினர்கள் ✻**

திருமதி. பல்லவி ஆப்டே, தலைவர்
திருமதி. லீனா தலாடி, உறுப்பினர்
திருமதி. தேஜஸ்வனி மஹஸ்கே, உறுப்பினர்
திருமதி. வந்தனா பட்தரே, உறுப்பினர்
திருமதி. சுனில் மோரே, உறுப்பினர்
மு. ரூபேஷ் தாம்பே, உறுப்பினர்
திருமதி. கீதாஞ்சலி காஷித், உறுப்பினர்
திரு. அங்கித் தேஷ்முக், அழைப்பு ஊறுப்பினர்
திருமதி. ரஷ்மி ராஜ்பூரகர், அழைப்பு உறுப்பினர்
திரு. பிரகாஷ் பாரகே, அழைப்பு உறுப்பினர்
திரு. வித்யாதர் மாத்ரே, அழைப்பு உறுப்பினர்
திருமதி. தீபாலி ஜோகதண்ட்,
பாடத்திட்ட ஒருங்கிணைப்பாளர்
மு. அஜய்குமார் லோல்கே,
உறுப்பினர், செயலாளர்

**✻ ஒருங்கிணைப்பு ✻**

மு. அஜய் குமார் லோல்கே
**சிறப்பு அதிகாரி,**
**செயல் அனுபவம்** (C.B.)
I/C சிறப்பு அதிகாரி , கலை
பாடநூல் கழகம், புனே-4.

**✻ மொழியாக்கம் ✻**

திரு. ஜோரிஸ் போஸ்கோ

**✻ ஆய்வு ✻**

திருமதி. ஹெலன் குளோரி ஆல்பென்

**✻ தர மதிப்பீட்டாளர்கள் ✻**

மு. எம்.ஜி. குரவ், தர ஆய்வாளர்
அட். சந்தோஷ் சாக்ரே, சட்ட நிபுணர்
டா. அதுல் ஜாதவ், CWSN நிபுணர்

**✻ மொழியாக்க ஒருங்கிணைப்பு ✻**

**முனைவர். துளசி பாரத் பூஷன்**
சிறப்பு அதிகாரி - தெலுகு (C.B.)
மகாராஷ்டிரா மாநிலப் பாடநூல் கழகம், புனே.

**தயாரிப்பு**

**திருமதி. மிதாலி ஷித்தப்**
I/C முதன்மை தயாரிப்பு அதிகாரி
**திரு. ப்ரஷாந்த் ஹரணே**
தயாரிப்பு அதிகாரி

**வெளியிடுவோர்**

**திரு. ஹேமந்த் வி. பாபர்**
I/C கட்டுப்பாட்டு அதிகாரி
மகாராஷ்டிர மாநிலப்
பாடநூலாக்கக் கழகம், பிரபாதேவி,
மும்பை - 25.

**✻ அட்டைப்படம் மற்றும் படங்கள் ✻**

திரு. லஷ்மிகாந்த் காலே
திருமதி. ப்ரஜக்தா கோர்கர்

அச்சு கோர்ப்பு : ஜே.கே. ஆர்ட்ஸ், மும்பை
தாள் : 70 ஜி.எஸ்.எம். கிரீம்வோவ்.
அச்சு ஆணை :
அச்சகம் :

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை
**இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச்**
**சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு
குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல்,
அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு,
கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில்
**தன்னுரிமை,** சமுதாடப்படிநிலை, வார்ப்புநலம்
இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச்
செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும்

தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
**உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த
உறுதியடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர்
இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த
அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே
வழங்கிக்கொள்கிறோம்.**

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

### பகுதி 4A

# குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு 51A

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

(a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

(b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

(c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

(d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

(e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லினக்கத்தையும் உளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

(f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

(g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

(h) அறிவியல் மனப்பாங்கு. மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

(i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

(j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

(k) 6 முதல் 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்குதல்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।

# முகவுரை

குழந்தை நண்பர்களே!

தேசியக் கல்விக் கொள்கை 2020-ன் படி, செயற்கல்வி வகுப்பு மூன்றிற்கான பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. உங்களது வயது மற்றும் அனுபவங்களைக் கருத்தில் கொண்டு, இந்தப் பாடப்புத்தகத்தைப் பயிலும் போது நீங்கள் மகிழ்ச்சியடைவதோடு, பல புதிய செய்முறைச் செயல்பாடுகளைச் செய்து பார்க்கும் வாய்ப்பைப் பெறுவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

தினசரி வாழ்க்கையில் நாம் செய்யும் வேலைகளைப் பற்றிய தகவல்களை இந்தப் பாடப்புத்தகம் உங்களுக்கு வழங்கும். வீட்டில் உள்ளவர்கள், சுற்றுப்புற மக்கள், பல்வேறு தொழில் செய்பவர்கள் மற்றும் கைவினைஞர்கள், என்ன வேலை செய்கிறார்கள் என்பதை நீங்கள் இதில் அறிந்து கொள்வீர்கள். அத்துடன் நற்பண்புகள், பிறரிடம் முறையாகப் பேசுவது மற்றும் சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்வது போன்றவற்றை நீங்கள் கற்றுக் கொள்ளலாம்.

இந்தப் புத்தகத்தில் பல செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, காகிதத்தில் பொருட்கள் செய்தல், இலைகள் மற்றும் பூக்களால் கோலமிடுதல், மாலைகள் - தோரணங்கள் தயாரித்தல், விதைகளைக் கொண்டு கலைப்படைப்புகளை உருவாக்குதல், களிமண்ணால் பொம்மைகள் செய்தல், வீட்டுத் தோட்டம் அமைத்தல் மற்றும் களப்பயணங்கள் மேற்கொள்ளுதல் போன்றவை இதில் அடங்கும். இத்தகைய செயல்பாடுகள் உங்கள் கற்பனைத்திறன், கைத்திறன் மற்றும் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்க உதவும்.

செயல்பாடுகள், படங்கள், உரையாடல்கள், கதைகள், பாடல்கள் மற்றும் விளையாட்டுகள் மூலம் கற்றல் மிகவும் எளிமையாகவும், மகிழ்ச்சியாகவும் மாறும் ஒவ்வொரு செயலையும் நீங்கள் செய்து கற்பதற்கான வாய்ப்பு இந்தப் பாடப்புத்தகத்தில் கிடைக்கும். ஆசிரியர்கள் உங்களது வேலைகளைக் கவனித்து, நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்பதைப் பதிவு செய்வார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு பிடித்த முறையில் கற்க வேண்டும். முயற்சி செய்ய வேண்டும் மற்றும் ஒவ்வொரு செயல்பாட்டிலும் பங்கேற்க வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு.

இப்பாடநூலில் உங்களை கவர்ந்த, இன்னும் சேர்க்கவேண்டிய விஷயங்களைப் பற்றி எங்களுக்கு அறிவிக்க மறவாதீர்கள்.

உங்கள் ஒளிமையமான எதிர்காலத்திற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்!

வாருங்கள், கற்போம், செய்வோம், மகிழ்வோம்.

**(அனுராதா ஓக்)**
இயக்குநர்
மகாராஷ்டிரா மாநில பாடநூலாக்கம்
மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம்,
புனே.

புனே
நாள்: 19 ஏப்ரல், 2026,
இந்திய ஆண்டு: 02 வைசாக் 1948
அக்ஷய திருதிய

## ஆசிரியர்களுக்காக

தேசியக் கல்விப் கொள்கை 2020-ன் படி நிர்ணயிக்கப்பட்டுள்ள 5+3+3+4 என்ற கல்வி அமைப்பிற்கேற்ப, ஆயத்தநிலையைக் கருத்தில் கொண்டு, மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்காக செயற்கல்வி (Work Experience) என்ற பாடத்திற்கான இந்தப் புத்தகம் முதன் முறையாக உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே வேளையில், அவர்களின் அனுபவ உலகத்துடன் தொடர்புடைய, செயல்பாடு சார்ந்த மற்றும் மகிழ்ச்சியான கல்வியை வழங்குவதே இந்தப் பாடப்புத்தகத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தப் பாடப்புத்தகத்தை வடிவமைக்கும் போது, செயல்பாடுகள் மற்றும் அனுபவ அடிப்படையிலான கற்றல் முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. பாடத்திட்டத்தின் குறிக்கோள்கள், திறன்கள் மற்றும் கற்றல் விளைவுகளைக் கருத்தில் கொண்டு, செயல்பாடுகள் மற்றும் திட்டப்பணிகள் உள்ளடக்கம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் செய்யும் வேலைகளைப் புரிந்து கொள்ளவும், குடும்பம் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் பங்களிப்பை அறியவும், சமூக வாழ்க்கையில் நல்லொழுக்கத்தை வளர்த்துக் கொள்ளவும், பல்வேறு தொழில்கள் மற்றும் கைவினைஞர்களின் பணிகளை அனுபவப்பூர்வமாக அறிந்து கொள்ளவும் பல்வேறு செயல்பாடுகள் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களிடையே தகவல் தொடர்புத் திறன், கைத்திறன், தொழில்நுட்பத்திறன் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வளர்க்கும் நோக்கில் காகிதக் கலை, இலைகள் மற்றும் பூக்களால் கோலமிடுதல், தோரணங்கள் தயாரித்தல், விதைகளைக் கொண்டு கலைப்படைப்புகளை உருவாக்குதல், களிமண் பொம்மைகள் செய்தல், வீட்டுத் தோட்டம், களைப்பயணங்கள் மற்றும் புதிர்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த அனைத்துச் செயல்பாடுகளும் அனுபவ உதாரணங்களுடன் விளக்கப்பட்டு, மாணவர்களின் வாழ்க்கையோடு இணைக்கப்பட்டுள்ளன. மனம் கவரும் படங்கள், செய்முறைச் செயல்பாடுகள் மற்றும் வண்ணமயமான வடிவமைப்பு ஆகியவற்றால் இந்தப் பாடப்புத்தகம் மாணவர்களுக்கு மிகவும் நெருக்கமானதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது.

ஒவ்வொரு பாடப்பகுதியும் செயல்பாடுகளுக்கும், சிந்தனை திறனுக்கும் முன்னுரிமை அளிப்பதுடன், மாணவர்களின் திறன்கள் மற்றும் கற்றல் விளைவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. உரையாடல்கள், கதைகள் மற்றும் பாடல்களைப் பயன்படுத்தி கற்பித்தல் - கற்றல் செயல்முறை மகிழ்ச்சிகரமானதாக மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேரடிச் செயல்பாடுகளின் அடிப்படையில் கற்பிப்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவமே இந்தப் பாடப்புத்தகத்தின் சிறப்பம்சமாகும் இந்தச் செயல்பாடுகளை வகுப்பறையிலும், வகுப்பறைக்கு வெளியேயும் மேற்கொள்வதற்கு வசதியாக, ஒவ்வொரு பாடத்தின் கீழும் இளஞ்சிவப்பு நிறக் கட்டத்தில் ஆசிரியர்களுக்கான குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளி அல்லது சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்களை மதிப்பிடும் போது, மிகுந்த உணர்திறனுடன் செயல்பட்டு, அவர்கள் தங்களை வெளிப்படுத்தவும், செயல்பாடுகளில் பங்கேற்கவும் வாய்ப்பளிப்பது அவசியமாகும்.

கலைத்திட்டக் குறிக்கோள்கள், (க.தி.) கற்றல் திறன்கள், (தி.) கற்றல் விளைவுகள், (க.வி.) கற்றல் அனுபவங்கள் மற்றும் மதிப்பீட்டு முறைகளைக் கருத்தில் கொண்டு, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட பாடவேளைகளுக்கு ஏற்பச் செயல்பாடுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கற்றல் விளைவுகளின் செயல்திறனைச் சரிபார்க்க, பல்வேறு அளவுகோல்களைப் பயன்படுத்தித் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மாணவர்களின் திறன்களை வளர்ப்பதற்காகப் பல ஆசிரியர்கள் புதிய மற்றும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைச் செயல்படுத்தி வருகின்றனர். அத்தகைய செயல்பாடுகள் குறித்த தகவல்களையும், புகைப்படங்களையும் பாடநூல் கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்தப் பாடபுத்தகத்தைப் பயன்படுத்திய பிறகு, சம்பந்தப்பட்டவர்கள் தங்களின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் கழகத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உங்களின் யோசனைகள் மற்றும் செயல்பாடுகள் மனதார வரவேற்கப்படுகின்றன.

21-ஆம் நூற்றாண்டின் மாணவர்கள் திறமையானவர்களாகவும், படைப்பாற்றல் மிக்கவர்களாகவும், பொறுப்புள்ள குடிமக்களாகவும் உருவாவதற்கு இந்தப் பாடப்புத்தகத்தின் வாயிலாக ஒரு நல்ல முயற்சி அடி எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிக்கு அனைவரின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

**செயற்கல்வி (பாடக்குழு)**

**பாடநூல் கழகம், புனே.**

# கலைத்திட்டம், கற்றல், திறன் மற்றும் பாடப்பகுதிகள்

| | |
|---|---|
| பாடத்திட்ட நோக்கம் : CG-1 : அன்றாட வேலைகளைப் பற்றி தகவல்களைப் பெறுதல் | |
| பாடத்திறன் : C-1,1 : குடும்ப உறுப்பினர்களின் அன்றாட வேலைகளைப் பற்றி கூறுதல். | பாடப்பகுதி : அன்றாட வேலைகள் |
| **துணைப்பாடப்பகுதிகள்** | **கற்றல் விளைவுகள் (LOs)** |
| 1) குடும்பத்தின் அன்றாட வேலைகள் | 1) குடும்ப உறுப்பினர்களின் அன்றாட வேலைகளைக் கவனித்தல் |
| 2) வீட்டிலுள்ள கருவிகள் | 2) வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் கருவிகள்/பொருட்களைப் பற்றி அற்தல் |
| 3) கருவிகளின் பயன்பாடு | 3) வீட்டிலுள்ள பல்வேறு கருவிகளின் பயன்பாடுகளைச் சொந்த சொற்களில் கூறுதல் |
| 4) வீட்டு வேலைகளில் உதவுதல் | 4) தனது விருப்பம் மற்றும் திறனுக்கேற்ப வீட்டு வேலைகளில் உதவு |
| பாடத்திட்டதிறன் : C-1.2 : சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் அன்றாட வேலைகளைப் பற்றி அறிதல் மற்றும் கூறுதல். | |
| பாடப்பகுதி : சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் வேலைகள் | |
| 1) சுற்றுப்புறத்தில் உள்ளவர்களும் அவர்களின் வேலைகளும் | 5) சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் வேலைகளைக் கவனித்தல் |
| 2) வேலையின் பயன் | 6) சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் வேலைகளின் பயன்களைக் கூறுதல் |
| | 7) சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் வேலைகளைப் பற்றிய தனது அனுபவத்தைக் கூறுல் |
| பாடத்திட்டநோக்கம் : CG-2 : சமூக வாழ்க்கையில் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துதல். | பாடப்பகுதி : நமது நடத்தை |
| பாடத்திட்டதிறன் : C-2.1 : வீட்டிலும், சமூகத்திலும் பழகும் போது நல்லொழுக்கத்தை கடைபிடித்தல் | |
| 1) நல்லொழுக்க நடத்தை | 8) குடும்ப உறுப்பினர்களின் நல்லொழுக்க நடத்தையைக் கவனித்தல் |
| 2) பின்பற்றுதல் | 9) குடும்ப உறுப்பினர்களின் நல்லொழுக்க நடத்தையை பின்பற்றுதல் |
| 3) குடும்பம் மற்றும் பாதுகாப்பு | 10) குடும்பத்தின் பாதுகாப்பைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடத்தல். |
| பாடப்பகுதி : சமூகம் | |
| 1) சமூக ஒழுக்க விதிகள் | 11) சமூக நடத்தையின் விதிகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடத்தல். |
| 2) அவசர காலங்களில் நடத்தை | 12) அவசரக் காலச் சூழ்நிலைகளில் பொருளைப் புரிந்து கொள்ளுதல். |
| 3) தற்காப்பு | 13) தற்காப்பு குறித்த தகவல்களைப் பெறுதல். |
| பாடத்திட்ட நோக்கம் : CG-3 : பல்வேறு தொழில்கள்/கைவினைஞர்கள் வேலைகளில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டுதல் | |
| பாடத்திட்டதிறன் : C-3.1 : சுற்றுப்புறத்தில் உள்ள தொழில்கள் மற்றும் தொழிலாளர்களின் வேலைகளைப் பற்றி அறிதல். | |
| பாடப்பகுதி : சுற்றுப்புற தொழில்களை அறிவோம். | |
| 1) தொழில் அடையாளம் காணுதல் | 14) சுற்றுப்புறத்தில் உள்ள தொழில்களை பற்றி அறிந்து கொள்ளுதல். |
| 2) பாரம்பரியத் தொழில்கள் | 15) சுற்றுப்புறத்திலுள்ள பாரம்பரியத் தொழில்களைப் பற்றி அறிதல் |
| 3) நவீனத் தொழில்கள் | 16) பாரம்பரிய மற்றும் நவீன தொழில்களுக்கு இடையேயான மாற்றங்களைப் புரிந்து கொண்டு தகவல்களைப் பெறுதல் |
| 4) தொழில்களில் உள்ள வேறுபாடுகள் | 17) பாரம்பரிய மற்றும் நவீனத் தொழில்களின் வேறுபாடுகளைக் காணுதல். |
| 5) உழைப்பின் மேன்மை | 18) சுற்றுப்புறத் தொழிலாளர்கள்/கைவினைஞர்களின் வேலைகளுக்கு மதிப்பளித்தல் |
| பாடத்திட்டதிறன் : C-3.2 : இயற்கை சார்ந்த உற்பத்தி பணிகள் குறித்து அறிதல். | பாடப்பகுதி : இயற்கை வளங்கள் |
| **துணைப்பாடப்பகுதிகள்** | **கற்றல் விளைவுகள் (LOs)** |
| 1) வீட்டுத் தோட்டம் | 19) வீட்டுத் தோட்ட வேலைகள் குறித்த தகவல்களைப் பெறுதல். |
| 2) கால்நடை மற்றும் பறவை வளர்ப்புத் தொழில் | 20) விலங்குகள் மற்றும் பறவைகள் தொடர்பான தொழில்களைப் பற்றி அறிதல் |
| பாடத்திட்ட நோக்கம் : CG-4 : பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் | பாடப்பகுதி : திறன் மேம்பாடு |
| பாடத்திட்டதிறன் : C-4.1 : கைவினை, உரையாடல் மற்றும் தொழில்நுட்பத் திறன்களை வளர்த்தல். | |
| 1) கைத் திறன் | 21) அன்றாட வேலைகளுக்குத் தேவையான திறன்களைப் புரிந்து கொள்ளுதல் |
| | 22) கைத் திறன்களைப் பயன்படுத்திப் பல்வேறு பொருட்களை உருவாக்குதல். |
| 2) உரையாடல் திறன் | 23) உரையாடல் திறனைப் பயன்படுத்தி தொடர்புகளை ஏற்படுத்துதல். |
| 3) தொழில்நுட்பத் திறன் | 24) அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் உள்ள தொழில்நுட்பத்தைப் புரிந்து கொண்டு அவற்றைச் சரியாகப் பயன்படுத்துதல். |

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | அன்றாடப் பணிகள் | 1 |
| 2. | கருவிகளின் பயன்பாடு | 3 |
| 3. | வீட்டு வேலைகளில் உதவி | 7 |
| 4. | சமையல் கலை | 10 |
| 5. | எனது சுற்றுப்புறம் | 11 |
| 6. | வீட்டுத் தோட்டம் | 14 |
| 7. | நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள் மற்றும் அவர்களின் பணிகள் | 20 |
| 8. | பணிகளின் பயன்கள் | 25 |
| 9. | கைத்திறன் | 29 |
| 10. | நமது நடத்தை : பயன் தரும் நல்ல நடத்தை | 32 |
| 11. | குடும்பம் மற்றும் பாதுகாப்பு | 35 |
| 12. | சமூக நடத்தை விதிகள் | 39 |
| 13. | அவசரக்காலச் சூழலில் நடத்தை | 43 |
| 14. | தற்காப்பு : நல்ல தொடுதல்/கெட்ட தொடுதல் | 45 |
| 15. | நம்மைச் சுற்றியுள்ள தொழில்களை அறிவோம் | 48 |
| 16. | உழைப்பின் உயர்வு | 56 |
| 17. | கைத்திறன் | 57 |
| 18. | விலங்குகள் மற்றும் பறவைகள் சார்ந்த தொழில்கள் | 59 |
| 19. | மீன்பிடித் தொழில் | 64 |
| 20. | அத்தியாவசியத் திறன்கள் | 66 |
| 21. | தொழில்நுட்ப மாற்றங்கள் | 74 |
| 22. | கணினி பாகங்களின் அறிமுகம் | 76 |


குறிப்பு : சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்களுக்கான கற்றல்-கற்பித்தல் செயல்பாட்டின் போது சைகை மொழி மற்றும் துணை கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும். சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்கள் தங்களால் இயன்ற வழிகளில் தங்களை வெளிப்படுத்தி கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

# 1. அன்றாடப் பணிகள்

அன்றாடப் பணிகள் என்பது நாம் ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலைகளைக் குறிக்கும். இந்த வேலைகளை குறித்த நேரத்தில், சரியாகச் செய்வது நமது வாழ்க்கையை ஒழுக்கமாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்திருக்கிறது. இவை நமக்கு நல்ல பழக்கங்களை ஏற்படுத்துவதோடு, நம்மை ஆரோக்கியமாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் மாற்றுவதால் அன்றாடப் பணிகள் நமது வாழ்வில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

## எனது செயல்கள்

**1. கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனி. யார் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றி கலந்துரையாடுக.**













## 2. யார் என்ன செய்கிறார்கள்?

**படங்களை கவனித்து, யார் என்ன வேலை செய்கிறார்கள் என்பதை உன் சொந்தச் சொற்களில் எழுது**

1) பாட்டி - ....................................................

2) அக்கா - ....................................................

3) அப்பா - ....................................................

4) தாத்தா - ....................................................

5) அம்மா - ....................................................

6) அண்ணன் - ....................................................

**3) உனது வீட்டில் உள்ளவர்கள் என்னென்ன வேலைகளைச் செய்கிறார்கள் என்ற தகவலைக் கீழே உள்ள காலியிடங்களில் எழுது.**




க.தி.1
தி.1.1
க.வி.1

• வீட்டில் செய்யும் அன்றாட வேலைகளைப் பற்றி கலந்துரையாடுங்கள்.

# 2. கருவிகளின் பயன்பாடு

நாம் ஒவ்வொரு நாளும் பல வேலைகளைச் செய்கிறோம். இந்த வேலைகளைச் செய்ய பல்வேறு பொருட்கள் தேவைப்படுகின்றன. இத்தகைய பொருட்களை நாம் ‘உபகரணங்கள்’ அல்லது ‘கருவிகள்’ என்கிறோம். வாருங்கள், சில கருவிகளைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.


சப்பாத்தி பலகை - உருளை


துடைப்பம்


தோசைக்கல்


தாம்பாளம்


விளக்குமாறு


வாளி


கழிப்பறை தேய்க்கும் தூரிகை


பூவாளி


அரிவாள்


சட்டி


பாத்திரம்


சீப்பு

## எனது செயல்கள்

**1. படங்களைக் கவனி, படத்திலுள்ள பொருட்களின் பெயரைச் சொல்லி அதன் பயன்பாடு எழுதுக.**

| பொருள் (படம்) | பொருள்களின் பெயர் | பயன்பாடு |
|---|---|---|
|  | | |
|  | | |
|  | | |
|  | | |

| | | |
|---|---|---|
|  | | |
|  | | |
|  | | |

2. **அன்றாட வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தும் கருவிகளின் படங்களைச் சேகரித்து ஒட்டி, அவற்றின் பெயர்களையும், பயன்களையும் கீழே எழுதவும்.**

பெயர் ..........................  பெயர் ..........................  பெயர் ..........................

பயன்பாடு ..........................  பயன்பாடு ..........................  பயன்பாடு ..........................

பெயர் ..........................  பெயர் ..........................  பெயர் ..........................

பயன்பாடு ..........................  பயன்பாடு ..........................  பயன்பாடு ..........................

பெயர் ..........................  பெயர் ..........................  பெயர் ..........................

பயன்பாடு ..........................  பயன்பாடு ..........................  பயன்பாடு ..........................

### 3. எனது துணையைக் கண்டுபிடி

சப்பாத்தி



எரிவாயு அடுப்பு



பூரி



பூந்தொட்டி



மண்



புல்



வாணலி



பூவாளி



தோசைக்கல்



லைட்டர்



புல் வெட்டி



சட்டி



## 4. கண்டுபிடியுங்கள் - நான் யார்?

1) சப்பாத்தி-ரொட்டிக்கான மாவை பிசையப் பயன்படுத்துவேன்...............................

2) செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றப் பயன்படுவேன். ...............................

3) செடிகள் நடுவதற்கான குழிகளைத் தோண்டப் பயன்படுவேன்...............................

4) தானியங்களை அரைக்கப் பயன்படுவேன். ...............................

5) சூடான பாத்திரங்களைத் தூக்கப் பயன்படுவேன். ...............................

6) துருவுவதற்கு பயன்படுவேன். ...............................

7) மின்சாரம் இல்லாத போது மசாலா அரைக்கப் பயன்படுவேன்...............................

8) அசுத்தமான கைகளைச் சுத்தம் செய்யப் பயன்படுவேன். ...............................

9) தானியங்களைப் புடைக்கப் பயன்படுவேன். ...............................

10 எரிவாயு அடுப்பு மற்றும் அடுப்பைப் பற்றவைக்கப் பயன்படுவேன்...........................



- கலந்துரையாடல்கள் மூலம் மாணவர்கள் வீட்டில் சமையல், சுத்தம் செய்தல், தோட்டம் அமைத்தல் போன்ற வேலைகளுக்கு என்னென்ன உபகரணங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்று கேட்கவும். அவற்றைப் பட்டியலிடச் சொல்லவும்.

க. தி. 1
தி. 1.2
க. வி. 2,3

# 3. வீட்டு வேலைகளில் உதவி

வீட்டில் அனைத்து உறுப்பினர்களும், வீட்டு வேலைகளில் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். இதனால் வேலைகள் விரைவாக முடிகிறது. பொறுப்புணர்வு வளர்கிறது. சுத்தம் மற்றும் நேர்த்தியான பழக்கவழக்கங்கள் ஏற்படுகிறது. குடும்பத்தில் அன்பும் ஒத்துழைப்பும் அதிகரிக்கிறது.

## எனது செயல்



### १. गाणे गाऊया

வாருங்கள் நாம் அனைவரும் சிந்திப்போம்
வீட்டுப் பணிகளில் உதவி செய்வோம்

அம்மாவும், பாட்டியும் சமையல் செய்கிறார்கள்,
அவர்களுக்கு உதவி செய்வோம்.
சமையல் முடிந்ததும் அனைவரும் சேர்ந்து உண்ண அமருவோம்.

அண்ணன் காய்கறிகள் அரிகிறான், நாமும் அரிவோம்
சேர்ந்த குப்பைகளை அள்ள, அண்ணனுக்கு உதவுவோம்.

தாத்தா தோட்டத்தில் வேலை செய்கிறார்,
அவருக்கு உதவி செய்வோம்.
செடிகளுக்கு நீர் ஊற்றி, அவற்றை வளர்ப்போம்.

மாமாவும், அப்பாவும் காய்கறி வாங்கி வருகிறார்கள்.
பையைத் தூக்கி இருவருக்கும் உதவி செய்வோம்.

அக்காவும், அத்தையும் கோலம் போடுகிறார்கள்,
அவர்களுக்கு உதவி செய்வோம்.
வண்ணங்களைத் தீட்டி கோலத்தை அழகுபடுத்துவோம்.

வீட்டு பணிகளில் உதவி செய்வோம்
உதவி செய்து அனைவருக்கும் மகிழ்ச்சி அளிப்போம்.

- இப்பாடலை தாளத்துடன் பாடச் சொல்லிக் கொடுக்கவும். வீட்டு வேலைகளில் உதவி செய்வதால் ஏற்படும் நன்மைகளை மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லவும்.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களில், வீட்டில் உள்ளவர்கள் பல்வேறு வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவற்றில் நீ எந்தெந்த வேலைகளில் உதவி செய்கிறாயோ, அந்தப் படங்களுக்கு முன்னால் ✓ என்று குறியிடவும்.

















## 3. பின் வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1) நீ வீட்டு வேலைகளில் உதவி செய்கிறாயா?

..............................................................................................................

2) நீ உதவி செய்யும் குறைந்தது ஐந்து வேலைகளைப் பட்டியலிடுக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................



க. தி. 1

தி. 1.1

க. வி. 4

- மாணவர்கள் வீட்டு வேலைகள் செய்வது போல நடித்துக் காட்டச் செய்யவும்.

# 4. சமையல் கலை

வீட்டில் உள்ள பொருட்களைக் கொண்டே சுவையான உணவுகளைத் தயாரிக்க முடியும். அவை ஊட்டச்சத்து மிகுந்து காணப்படும். அதற்கேற்ப, நாம் இப்போது எரிபொருள் இல்லாத சமையல் முறையைக் கற்க போகிறோம்.

**எனது செயல்**

கீழே கொடுக்கப்பட்ட படங்களை கவனித்து, கொடுக்கப்பட்டுள்ள பொருள்களைக் கொண்டு அழுத்திய போஹா தயார் செய்.

**தேவையான பொருட்கள்**

அவல், வெங்காயம், பச்சை மிளகாய், வறுத்த வேர்கடலை, சர்க்கரை, உப்பு, எலுமிச்சை, தக்காளி, துருவிய தேங்காய், கரண்டி, கிண்ணம் மற்றும் பாத்திரம்.



1. ஒரு பாத்திரத்தில் அவலை எடுத்துக் கொள்ளவும்.




2. வெங்காளம், தக்காளி மற்றும் மிளகாயை நறுக்கிக் கொள்ளவும்.



3. அவலுடன், நறுக்கிய வெங்காயம், தக்காளி, மிளகாய், வேர்கடலை, துருவிய தேங்காய், சர்க்கரை, உப்பு மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து நன்றாகக் கலக்கவும்.



4. அவல் உள்ள பாத்திரத்தை ஒரு தட்டினால் மூடவும்.



5. மூடிய தட்டின் மேல் ஒரு கனமான பொருளை வைத்து 15 நிமிடங்கள் அப்படியே விடவும்.



இப்போது சுவையான அழுத்திய போஹா தயார்

க. தி. 4
தி. 4.1
க. வ. 22

• அழுத்திய போஹா செய்வதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வரச் சொல்லி, வகுப்பறையில் சொந்தமாக மாணவர்களை தயார் செய்ய ஊக்குவித்தல்.

# 5. எனது சுற்றுப்புறம்

நமது வீடும் அதைச் சுற்றியுள்ள பகுதியுமே சுற்றுப்புறம் எனப்படும். இதில் பள்ளி சாலைகள், வீடுகள், மரங்கள், தோட்டங்கள், விலங்குகள், பறவைகள், விவசாய நிலங்கள், மண், கற்கள், ஆறுகள், ஓடைகள், மருத்துவமனை, பேருந்து நிலையம், இரயில் நிலையம் போன்ற அனைத்தும் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களில் அடங்கும்.

1. நகரச் சுற்றுப்புறம்.



2. கிராமச் சுற்றுப்புறம்.



## எனது செயல்



**1. கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பற்றி கலந்துரையாடுக.**

1. கொடுக்கப்பட்டுள்ள இரண்டு படங்களுக்குப் இடையே உள்ள வேறுபாடுகளைக் கூறுக?
2. குழந்தைகள் எங்கே செல்கிறார்கள்?
3. பள்ளியிலிருந்து வீட்டிற்கு வரும் போது நீ என்னவெல்லாம் பார்க்கிறாய்?
4. உனது சுற்றுப்புறத்தில் உள்ள குறைந்தது ஐந்து பொருட்களின் பெயர்களைக் கூறுக?



**2. உனது சுற்றுப்புறத்தின் படத்தை வரை.**

க. தி. 1

தி. 1.2

க. வி. 5

- நகரப்புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கவும்.

# 6. வீட்டுத் தோட்டம்

வீடு, பள்ளி அல்லது சுற்றுப்புறத்தில் உள்ள காலி இடங்களில் செடிகளை நட்டு வளர்க்கப்படும் சிறிய தோட்டமே வீட்டுத் தோட்டம் எனப்படும். வீட்டுத் தோட்டத்தில் காய்கறிகள் மற்றும் பழங்கள் சிறிய அளவில் வளர்க்கப்படுகின்றன. இதில் காய்கறிகள், கீரை வகைகள், மூலிகைத் தாவரங்கள் மற்றும் பழ மரங்கள் நடப்படுகின்றன. உதாரணமாக, கொத்தவரங்காய், வெண்டைக்காய், எலுமிச்சை, ஓமம், இஞ்சி, பீர்க்கங்காய், பாகற்காய், தென்னை, கொய்யா, சீதாப்பழம், துளசி, பூச்செடிகள் போன்றவை.

இவற்றை வளர்ப்பதன் மூலம் நமக்குத் தேவையான புதிய பழங்கள், பூக்கள், இலைகள், காய்கறிகள் மற்றும் மூலிகைத் தாவரங்கள் கிடைக்கின்றன.

வீட்டுத் தோட்டத்தில் நடுவதற்குத் தேவையான பழமரங்கள், காய்கறிச் செடிகள் மற்றும் பூச்செடிகளின் நாற்றுகள் அரசு பண்ணைகள், வேளாண் பல்கலைக்கழகங்கள், மற்றும் தனியார் நாற்றுப் பண்ணைகளில் கிடைக்கின்றன. வீட்டுத் தோட்டத்தினால் நமக்கு தேவையான புதிய பழங்கள் மற்றும் காய்கறிகள் கிடைக்கின்றன. இதனால் உடலுக்கு தேவையான ஊட்டச் சத்து கிடைப்பதுடன் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. சந்தையில் காய்கறிகள் மற்றும் பழங்கள் வாங்கும் செலவு குறைகிறது. விளைச்சல் அதிகமாக இருந்தால் அவற்றை விற்பதன் மூலம் வருமானமும் ஈட்டலாம்.



## எனது செயல்

1. நீ பார்வையிட்ட வீட்டுத் தோட்டத்தில் இருந்த செடிகளின் பெயர்களை எழுது.

..............................................................................................................................

2. பள்ளி அல்லது வீட்டுத் தோட்டத்தில் நடுவதற்கு எந்தெந்த செடிகள் மற்றும் நாற்றுகளை நீ தேர்ந்தெடுப்பாய்.

..............................................................................................................................

3. கட்டங்களில் ஒளிந்துள்ள மூலிகைத் தாவரங்களின் பெயர்களைக் கண்டுபிடித்து எழுது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | நெ | ப | ய | அ | இ |
| ர | ல் | ண | ளை | வ | ஞ் |
| ய | லி | றா | து | ள | சி |
| ல | ற் | ம | ஞ | வே | ற |
| க | ம | ன | ச | ம் | வ |
| எ | சீ | மை | ப் | பு | ல் |

__________ __________ __________ __________ __________

__________ __________ __________ __________ __________

- சுற்றுப்புறத்தில் உள்ள வீட்டுத் தோட்டம் அல்லது காய்கறித் தோட்டத்திற்குச் சென்று, அங்குள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.
- தோட்டத்தில் என்னென்ன காய்கறிகள், கீரை வகைகள், பூச்செடிகள், பழ மரங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து பட்டியல் தயாரிக்கவும்.
- இந்தக் களப்பயணச் செயல்பாட்டை மேற்கொள்வது அவசியமாகும்.







## எனது செயல்



1. வீட்டுத் தோட்டத்தில் வளரும் காய்கறிகளின் பெயர்களைக் கூறுக.

---

2. உனக்கு விருப்பமான காய்கறிகளின் பட்டியலைத் தயார் செய்க.

---

3. பொருந்தாததைக் கண்டுபிடித்து வட்டமிடுக.

1) தக்காளி, கத்தரிக்காய், வெந்தயக்கீரை, குடைமிளகாய்.

2) பாகற்காய், வெள்ளரிக்காய், பீர்க்கங்காய், புளிச்சகீரை.

3) பசலைக்கீரை, இஞ்சி, கொத்தமல்லி, குப்பைக் கீரை.

4) கேரட், பீட்ரூட், முள்ளங்கி, வெண்டைக்காய்.

- பள்ளித் தோட்டத்தில் உள்ள செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதற்கு திட்டமிடவும்.
- ஊட்டச்சத்து நிறைந்த உணவான கீரை வகைகள் மற்றும் காய்கறிகளைப் பள்ளித் தோட்டத்தில் நடச் சொல்லவும்.
- பெற்றோருடன் இணைந்து, காய்கறிச் சந்தை அல்லது வாரச் சந்தைக்குச் சென்று வரச் சொல்லவும்.

## ◈ தொட்டியில் செடி வளர்த்தல்

சில நேரங்களில் செடிகளை நடுவதற்கு வீடு அல்லது பள்ளியில் போதிய இடம் இருப்பதில்லை. அத்தகைய சூழ்நிலைகளில், செடிகள் தொட்டிகளில் வளர்க்கப்படுகின்றன.

**பலவித தொட்டி வடிவங்கள்**





**எனது செயல்**



**1. படத்தில் உள்ள தொட்டியை அலங்கரிக்கவும்.**



- எந்தெந்த செடிகளைத் தொட்டியில் வளர்க்கலாம் என்பது குறித்த தகவல்களை வழங்கவும்.
- செடிகளைத் தொட்டியில் எவ்வாறு நடுவது என்பதைப் பற்றி செயல்முறை விளக்கம் காண்பிக்கவும்.

## ◈ எனது சிறிய தோட்டம்

**தோட்டப் பணிகள் :** தோட்டக் கலையில் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், உரம் கலத்தல், களை எடுத்தல், வேலி அமைத்தல், விதை விதைத்தல், புதிய நாற்றுகளை நடுதல் மற்றும் செடிகளின் வளர்ச்சியை கண்காணித்தல் போன்ற வேலைகளைச் செய்ய வேண்டும். இந்தப் பணிகளைச் செய்யும் போது, தோட்டக்கலை கருவிகளைக் கவனமாகக் கையாளுவதும், வேலை முடிந்த பின்னர் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வதும் அவசியமாகும்.



### எனது செயல்கள்

1. நீ நட்ட செடிக்கு அதன் பெயர் எழுதிய காகிதத்தை இணைக்கவும்.

2. வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்ய தேவையான கருவிகளின் பட்டியலை தயாரிக்கவும்.

க. தி. 3
தி. 3.2
க. வி. 19

• வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்யும் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் குறித்து மாணவர்களுக்கு வழி காட்டவும்.

(பச்சடி பாலக்கீரை - வெந்தயக்கீரை)

வீட்டுத் தோட்டத்தில் பல்வேறு வகையான கீரைகள் பயிரிடப்படுகின்றன. இந்த கீரைகளை பயன்படுத்தி சத்தான கீரை பச்சடிகளைத் தயாரிக்கலாம்.

## எனது செயல்



கீழ்கண்ட ப் பொருட்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி பாலக்கீரை-வெந்தயக் கீரை பச்சடியைத் தயார் செய்யவும்.

தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் :

வெந்தயக்கீரை, பாலக்கீரை இலைகள், வெங்காயம், தக்காளி, உப்பு, எலுமிச்சை, மிளகாய்த்தூள், சாட் மசாலா, பாத்திரம், பெரிய கரண்டி, கத்தி போன்றவை.

**செய்முறை :** வெற்தயக்கீரை மற்றும் பாலக்கீரை இலைகளை பிரித்தெடுத்து, சுத்தமாக கழுவி, ஒரு வடிகட்டியில் வைக்கவும். தக்காளியையும் கழுவிக் கொள்ளவும். வெந்தயக்கீரை, பாலக்கீரை, வெங்காயம் மற்றும் தக்காளியைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். நறுக்கிய பொருட்களை ஒரு பாத்திரத்தில் ஒன்றாகச் சேர்க்கவும். அதில் சுவைக்கேற்ப உப்பு, மிளகாய்த்தூள் மற்றும் சிறிது சாட் மசாலா சேர்த்து கரண்டியால் நன்றாகக் கிளறவும். இவ்வாறு தயார்செய்யப்பட்ட சத்தான மற்றும் சுவையான பாலக்கீரை-வெந்தயக்கீரை பச்சடியை அனைவரும் சேர்ந்து பரிமாறி உண்ணவும்.



- செய்முறைக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருமாறு மாணவர்களிடம் கூறவும்.
- மாணவர்களின் உதவியுடன் இச்செய்முறையைச் செய்து முடிக்கவும்.

# 7. நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள் மற்றும் அவர்களின் பணிகள்

நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு மனிதர்கள் வெவ்வேறு பணிகளைச் செய்கிறார்கள். அதனால் நமது வாழ்க்கை சீராக நடைபெறுகிறது. அந்தப் பணிகளில் சிலவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.



பால்காரர்



தையற்காரர்



மாலை மற்றும் பூக்கள் விற்பவர்



மருத்துவர் நோயாளியைப் பரிசோதிக்கிறார்



துப்புரவு பணியாளர்



பழம் விற்பவர்



பத்திரிக்கை விற்பவர் (செய்தித்தாள்)



குழந்தைகள் பராமரிப்பு மையம்




அலைபேசி சேவை மையம்

- பாடத்தில் உள்ள தொழில் செய்பவர்களின் பணிகளைப் பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு வழங்கவும்.

## எனது செயல்



1. முந்தையப் பக்கத்தில் குறிப்பிட்ட தொழில்கள் அல்லாமல் உனது பகுதியில் காணப்படும், வேறு தொழில் செய்யும் நபர்களைப் பற்றிய தகவல்களைக் கூறுக.
2. உனது பகுதியில் வசிக்கும் பிற தொழிலாளர்களின் பணிகளை விளக்கும் படங்களைச் சேகரித்து இங்கே ஒட்டவும்.

- பல்வேறு தொழில்களின் படங்கள் அல்லது பட அட்டைகள் ஆகியவற்றைக் காட்டி அவற்றைப் பற்றிய தகவல்களைக் கூறவும்.

**3. எனது பணியைக் கண்டுபிடி.**



பணி : ....................................

..........................................

பணி : ....................................

..........................................





பணி : ....................................

..........................................

பணி : ....................................

..........................................





பணி : ....................................

..............................................



பணி : ....................................

..............................................



பணி : ....................................

..............................................



பணி : ....................................

..............................................

4. காலியாக உள்ள இடங்களில் சரியான எழுத்துக்களை எழுதி, தொழில் செய்பவர்களின் பெயர்களை பூர்த்தி செய்க.

1. மரு _____ _____ வர்

2. _____ றியா _____ ர்

3. க _____ _____ _____ ரர்

4. மிட் _____ _____ காரர்

5. தொ_____ ல _____ பர்

6. வி_____ ணி

5. உனது பகுதியில் காணப்படும் இதைப் போன்ற பணிகளைச் செய்யும் நபர்களின் பணிகளைப் பட்டியலிடுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

- உங்கள் பகுதியில் உள்ள பல்வேறு பணிகளைச் செய்யும் நபர்களைப் பள்ளிக்கு அழைக்கவும். அவர்களுடன் உரையாடும் வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

# 8. பணிகளின் பயன்கள்

நமது பகுதியிலுள்ள மக்கள் பல்வேறு பணிகளைச் செய்வதால், அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கின்றனர். எனவே, ஒவ்வொரு பணியும் முக்கியமானதாகும்.

**எனது செயல்**

**1. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள நபர்கள் வெவ்வேறு பணிகளைச் செய்கிறார்கள். அந்த பணிகளின் பெயர்களைக் கூறி, அவற்றால் நமக்குக் கிடைக்கும் பயன்களை எழுது.**


















**படங்களில் காணப்பட்ட பணிகளின் பயன்கள் :**

1. ................................ 2. ................................

3. ................................ 4. ................................

5. ................................ 6. ................................

7. ................................ 8. ................................

**2. இவை தவிர வேறு எந்தப் பணிகள் நமக்கு உதவுகின்றன என்பதைப் பட்டியலிடுக.**

**3. ஒரு வாக்கியத்தில் விடையளி :**

1) வாகனங்களைக் கழுவும் இடம் ............................

2) போக்குவரத்தை சீர் செய்பவர் ............................

3) வீடுவீடாகச் சென்று கடிதம், பார்சல் கொடுப்பவர் ............................

4) பொருட்களை விற்பவர் ............................

5) பேருந்தில் பயணச்சீட்டு கொடுப்பவர் ............................

6) தானியங்களை விளைவிப்பவர் ............................



**4. பெரியவனாக வளர்ந்த பிறகு, நீ யாராக ஆக விரும்புகிறாய்?**

5. அட்டவணையை நிறைவு செய்க.

| நபர் | பணி | பயன் |
|---|---|---|
| ஆசிரியர் | மாணவர்களுக்கு பாடங்களைக் கற்க உதவுகிறார் | குழந்தைகள் அறிவாளிகளாக மாறுகிறார்கள் |
| விவசாயி | ______ ______ | உணவு, தானியங்கள் கிடைக்கின்றன |
| ______ | நோய்களுக்கு சிகிச்சை அளிக்கிறார் | நமது நோய்கள் குணமாகின்றன |
| துப்புரவு பணியாளர் | சாலைகளைச் சுத்தம் செய்கிறார் | ______ ______ |
| போக்குவரத்து காவலர் | ______ ______ | போக்குவரத்து சீராக நடைபெறுகிறது |
| தபால்காரர் | ______ ______ | மக்களுக்கு கடிதங்களும், பார்சல் சரியான நேரத்தில் கிடைக்கின்றன |
| கடைக்காரர் | அன்றாடத் தேவைக்கான பொருள்களை விற்கிறார் | ______ ______ |
| தோட்டக்காரர் | ______ ______ | தோட்டம் அழகாகவும், பொலிவாகவும் இருக்கிறது |
| மின்சாரப் பணியாளர் | மின் சாதனங்களைப் பழுதுபார்க்கிறார் | ______ ______ |
| குழாய் பழுதுபார்ப்பவர் | தண்ணீர் குழாய்களைப் பழுதுபார்க்கிறார் | ______ ______ |

• பல்வேறு நபர்கள் செய்யும் வேலைகளின் பயன்களைப் புரிந்து கொண்டு விளக்கவும்

க. தி. 1
தி. 1.2
க. வி. 6

## ◈ எனக்கு பிடித்த பணி

**6. கீழே கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு தொழில்களில் உனக்கு விருப்பமான பணிகளுக்கு கீழே ✓ குறியிடுக.**













- மாணவர்களுக்குப் பிடித்த பணிகளைப் பற்றிய விவரங்களைக் கேட்டறியவும்.
- பல்வேறு தொழில் செய்பவர்கள் போல வேடமணிந்து நடக்கச் சொல்லவும். அவர்கள் என்ன பணி செய்கிறார்கள் என்பதைக் கண்டறியும் விளையாட்டை நடத்தவும்.

# 9. கைத்திறன்

மற்றவர்கள் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தவும், வாழ்த்துகளைத் தெரிவிக்கவும் வாழ்த்து அட்டைகள் பயன்படுகின்றன.

**எனது செயல்**

### 1. வாழ்த்து அட்டை தயாரித்தல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி, படத்தில் உள்ள வரிசைப்படிச் செய்யவும்.

**தேவையான பொருட்கள்**

இளஞ்சிவப்பு வண்ண அட்டை, வெள்ளை வண்ண அட்டை, கத்தரிக்கோல், பசை, வண்ண பேனா, மினுமினுப்பு பேனா போன்றவை






2. ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்களுக்கு வழங்குவதற்காக ஒரு வாழ்த்து அட்டை தயார் செய்.

3. வண்ணக் காகிதத்தைப் பயன்படுத்தி பறவை ஒன்றை தயார் செய்.




- வாழ்த்து அட்டை தயாரிக்கத் தேவையான பொருட்கள் மற்றும் கருவிகளைக் கொண்டு வரச் சொல்லவும்.
- பொருட்கள் மற்றும் கருவிகளை பாதுகாப்பாகப் பயன்படுத்த அறிவுறுத்தவும்.

க. தி. 4
தி. 4.2
க. வி. 22

◈ மண் பொருட்கள் செய்தல்.

**4. கொடுக்கப்பட்டுள்ள வரிசைப்படி வழிமுறைகளைச் செய்து களிமண்ணால் ஆன ஒரு அலைபேசியைத் தயார் செய்க.**

**தேவையான பொருட்கள் :**

1. மென்மையான களிமண் 2. தண்ணீர் 3. களிமண்ணை நனைக்க ஒரு பாத்திரம்

4. அலங்கரிக்க வண்ணங்கள் 5. கைகளைத் துடைப்பதற்கான துணி 6. தூரிகை



1. மண்ணை நனைத்தல்



2. மண்ணை பிசைதல்



3. கையால் வடிவம் கொடுத்தல்



4. பொருளை உலர்த்துதல்



பொருளுக்கு வணணம் தீட்டுதல்

- மாணவர்களைப் பழங்கள், பொருட்கள், விளையாட்டுப் பொம்மைகள் போன்றவற்றைச் செய்யச் சொல்லவும்.
- மாணவர்கள் தயார் செய்த பொருட்களைக் கொண்டு ஒரு கண்காட்சியை நடத்தவும்.

க. தி. 1
தி. 1.2
க. வி. 7

# 10. நமது நடத்தை : பயன் தரும் நல்ல நடத்தை

ராகுல் விளையாடி முடித்த பின்னர், தனது விளையாட்டுப் பொருட்களைச் சரியான இடத்தில் அடுக்கி வைத்தான். இதைப் பார்த்த அவனது அம்மா மிகுந்த மகிழ்ச்சியடைந்து அவனைப் பாராட்டினார். அனன்யாவின் கால் தவறுதலாக தாத்தாவின் கண்ணாடி மீது பட்டுவிட்டது. ஆனால் அவள் உடனடியாக 'மன்னித்து விடுங்கள்' என்று கூறிவிட்டு, கண்ணாடியைச் சரியாக எடுத்து வைத்தாள். இவை பயன்தரும் நடத்தைக்கான உதாரணங்கள் ஆகும்.

**எனது செயல்**

**பயன்தரும் நடத்தை என்பது நல்ல நடத்தை ஆகும்.**

**1. கீழே உள்ள படங்களைக் கவனி. சரியான நடத்தை கொண்ட படத்திற்கு கீழே ✓ குறியிடுக.**















## 2. நீ என்ன செய்வாய்?

1. தாத்தா செய்தித்தாள் படிப்பதற்காகத் தனது கண்ணாடியைத் தேடிக் கொண்டிருக்கிறாள்.

2. அம்மா சந்தையிலிருந்து சாமான்கள் நிறைந்த பைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்.

3. அப்பா அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்திருக்கிறார்.

4. வீட்டிற்கு விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள்.

5. வீட்டில் ஒரு அறையில் யாரும் இல்லை. ஆனாலும் விளக்கும், மின்விசிறியும் ஓடிக் கொண்டிருக்கின்றன.

6. சாலையில் வாழைப்பழத் தோல் கிடக்கிறது.

7. வீட்டில் செய்தித்தாள்கள், வார இதழ்கள் மற்றும் புத்தகங்கள் சிதறிக்கிடக்கின்றன.

8. வீட்டில் செய்தித்தாள்கள், வார இதழ்கள் மற்றும் புத்தகங்கள் இறைந்துக் கிடக்கின்றன.

9. பள்ளிப் பை கீழே விழுந்து அதிலிருந்து நோட்டுப் புத்தகங்கள் வெளியே விழுந்துள்ளன.

10. வீட்டில் தண்ணீர் குழாய் திறந்து இருக்கிறது.

- மாணவர்கள் இத்தகைய சூழ்நிலைகளில் செய்ய வேண்டிய நன்னடத்தைகளைப் பற்றி கலந்துரையாடவும்.

க. தி. 2
தி. 2.1
க. வி. 8

### ◈ நன்னடத்தைகளைப் பின்பற்றுதல்.

குடும்பத்தினர் மற்றும் சமுதாயத்தில் உள்ளவர்களின் நல்ல குணங்களையும், பழக்க வழக்கங்களையும் கவனித்து, அவர்களைப் போலவே நாமும் நடந்து கொள்வதையே நன்னடத்தைகளைப் பின்பற்றுதல் என்கிறோம்.









**எனது செயல்**

**உன் குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் எந்தெந்த நல்ல பழக்கங்களை நீ பின்பற்றுகிறாய் என்பதைப் பற்றி ஏழுதுக.**

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

க. தி. 2

தி. 2.9

க. வி. 09

- ʻபின்பற்றுதல் தொடர்பான நிகழ்வுகளைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடவும்.
- நல்ல நடத்தைகளை நாடகம் மூலம் நடித்துக் காட்டச் செய்யவும்.

# 11. குடும்பம் மற்றும் பாதுகாப்பு

**எனது செயல்**

**1. வாருங்கள் பாடுவோம்**



என் குடும்பம், இனிய குடும்பம்,
என்னை நேசிக்கும் என் குடும்பம்!
அம்மா, அப்பா, அக்கா, அண்ணா,
வீட்டின் பாசம், பாட்டி-தாத்தா!



வீட்டின் பாதுகாப்பு-நமது பொறுப்பு,
கவனமுடன் இருப்போம் நாம் எப்போதும்!
அந்நிய நபரை வாசலில் தடுப்போம்,
குடும்ப பாதுகாப்பு விதிகளைக்
பின்பற்றுவோம்!

தண்ணீர் குழாயையோ, மின்சாரம் அல்லது எரிவாயுவோ,
கவனமுடன் பயன்படுத்துவோம் நாம் எல்லோரும்!
வீட்டை விட்டுச் செல்லும் போது பூட்டு போடுவோம்,
கதவு, சன்னல் மூடுவோம்!



ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்வோம்,
பாதுகாப்பு முக்கியம், என்னுடைய வீட்டின்

**நமது வீட்டு பாதுகாப்பு என்பது வீட்டில் உள்ள ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.**

• குடும்பம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்த சிறிய நிகழ்வுகளைக் கூறி மாணவர்களை நடிக்கச் சொல்லவும்.

**2. சொல்லுங்கள் பார்ப்போம்**

1) முன்பின் தெரியாத அந்நியர் வாசலுக்கு வந்தால் நீ என்ன செய்வாய்?

2) வீட்டை விட்டு வெளியே செல்லும் போது நீ எவற்றை கவனத்தில் கொள்வாய்?

3) தண்ணீர் குழாய்கள் அல்லது மின்சாரச் சாதனங்களைப் பயன்படுத்தும் போது நீ என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வாய்?

4) உனது வீட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய அம்மா - அப்பா என்ன செய்கிறார்கள்?

5) குடும்ப பாதுகாப்பிற்காக என்ன செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாய்?

**3. எந்தெந்த சூழ்நிலைகளில் பாதுகாப்பு அவசியம் என்பதை எழுதுக.**

**4. கீழ் கண்ட தொடர்பு எண்களை நோட்டுப் புத்தகத்தில் எழுதி அவற்றை மனப்பாடம் செய்.**

- அம்மா -
- அப்பா -
- அண்டை வீட்டார் அல்லது உறவினர்கள் -
- வகுப்பு ஆசிரியர் -
- தலைமையாசிரியர்கள் -

**அவசரகால எண்கள் :**

- காவல்துறை - 100
- மருத்துவ ஊர்தி - 102
- குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கான மருத்துவ ஊர்தி - 108
- தீயணைப்புத் துறை - 101
- குழந்தைகள் உதவி மையம் - 1098



• மாணவர்கள் அளிக்கும் விடைகளைப் பற்றி கலந்துரையாடவும்.

## முதலுதவிப் பெட்டி

நமது குடும்பத்திலுள்ள யாருக்கேனும் அவசரச் சிகிச்சை தேவைப்பட்டால், முதலுதவிப் பெட்டி நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வெட்டுக்காயம், சிராய்ப்பு, தீக்காயம் அல்லது வேறு ஏதேனும் காயம் ஏற்பட்டால், இதில் உள்ள பொருட்களைப் பயன்படுத்தி வீட்டிலேயே தற்காலிகமான மற்றும் உடனடி சிகிச்சையை நாம் அளிக்க முடியும். வீட்டில் உள்ள பெரியவர்களின் வழிகாட்டுதலின் கீழ் மட்டுமே முதலுதவிப் பெட்டியில் உள்ள பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.

**முதலுதவிப் பெட்டியில் உள்ள அத்தியாவசியப் பொருட்கள்.**

பஞ்சு, களிம்பு (காயங்களுக்கு தடவுவது, தீக்காயங்களுக்கு தடவுவது போன்றவை) காயத்திற்கான கட்டுத்துணி (பேன்டேஜ்), கத்தரிக்கோல், வெப்பமானி, பிட்டாடின், டெட்டால், ஒட்டும் கட்டுத்துணி (பென்டேட்), பாதுகாப்பு ஊசிகள், கைக்குட்டை மற்றும் வாய்வழி நீர்சத்து கரைசல் (ORS) போன்றவை.




**5. கீழே கொடுக்கப்பட்ட பொருட்கள் எதற்காகப் பயன்படுகின்றன என்பதைத் தேர்ந்தெடுத்து, அதற்கு நேரான கட்டத்தில் ✓ குறியிடுக.**

| பொருள் | 1. | அல்லது | 2. | |
|---|---|---|---|---|
| சுத்தமான பஞ்சு | காயத்தை சுத்தம் செய்ய | | காய்ச்சலை அளவிட | |
| கத்தரிக்கோல் | களிம்பை தடவ | | கட்டுத்துணியை வெட்ட | |
| நீர்சத்து கரைசல் (ORS) | உடலின் நீர் பற்றாக்குறையை நீக்க | | காயத்தை கழுவ | |
| உப்பு நீர் | காய்ச்சலின் போது தலைக்கு ஒத்தடம் கொடுக்க | | காயத்தின் மேல் தடவ | |
| பிட்டாடின், அயோடின் | சர்பத் தயாரிக்க | | கிருமித்தொற்றைத் தடுக்க | |

**6. சரியான படத்தின் கீழ் ✓ குறியிடுக.**

| | | |
|---|---|---|
| காயத்தின் மேல் கட்டுப் போடுவதற்குப் பயன்படுவது |  காயத்திற்கான கட்டுத் துணி |  காகிதம் |
| | | |
| காயத்தின் மேல் தடவுதற்கு பயன்படுத்துவது |  களிம்பு | உப்பு  |
| | | |
| காய்ச்சலை அளவிடப் பயன்படுத்துவது |  அளவுகோல் |  வெப்பமானி |
| | | |

**7. பின்வரும் கருவிகளின் படங்களை உன்னிப்பாகக் கவனித்து, அவற்றின் பயன்களைப் பற்றி அறிந்து கொள்க.**



இரத்த சர்க்கரை அளவிடும் கருவி



இரத்த ஆக்சிஜன் அளவிடும் கருவி


இரத்த அழுத்தமானி

- மாணவர்களுக்கு முதலுதவிப் பெட்டியிலுள்ள பொருட்களை அறிமுகம் செய்ய வேண்டும். அவற்றின் பயன்களை விளக்க வேண்டும். அந்தப் பொருட்களை நேரடியாகக் கையாளுவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- அந்தப் பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைச் செய்து காட்ட வேண்டும்.
- மருத்துவப் பொருட்களின் காலாவதி தேதியைப் பார்த்துப் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தல்.

க. தி. 2
தி. 2.1
க. வி 10

# 12. சமூக நடத்தை விதிகள்

சுற்றுச்சூழலில் இயங்கும் போது, நமது சில செயல்களால் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் இத்தகைய நடத்தைகளை நாம் தவிர்க்க வேண்டும்.

## எனது செயல்

**1. கீழே கொடுக்கப்பட்ட படங்களைப் பார் சரியான செயலுக்கு கீழே உள்ள கட்டத்தில் ✓ குறியும், தவறான செயலுக்குக் கீழே உள்ள கட்டத்தில் ✗ குறியும் இடுக.**

















- சரியான சமூக நடத்தைகள் குறித்து கலந்துரையாடி ஒரு பட்டியலைத் தயார் செய்யவும்.

2. சரியான மற்றும் தவறான செயல்களை அடையாளம் காணவும். சரியான செயலுக்கு நேராக உள்ள கட்டத்தில் ✓ குறியும், தவறான செயலுக்குக் ✕ குறியும் இடுக.

1) மருத்துவமனையில் சத்தமாகப் பேச வேண்டும்

2) சாலையைக் கடக்கும் போது 'ஜீப்ரா கிராசிங் பயன்படுத்த வேண்டும்

3) பொதுப் பூங்காவிலுள்ள பூக்களைப் பறிக்க வேண்டும்.

4) விலங்குகள் மற்றும் பறவைகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது.

5) சாலையில் துப்பக் கூடாது.

3. படங்களைக் கவனித்து, நீ என்ன செய்வாய் என்று எழுது.



1) நன்பன் பள்ளிக்கூட மேசையை கவராயத்தால் கீறிக் கொண்டிருக்கிறான்.

-

............................................................

2) பொது இடத்தில் உள்ள தண்ணீர் குழாய் திறந்துள்ளது அதிலிருந்து தண்ணீர் வீணாக வெளியேறுகிறது.

-

............................................................





3) பேருந்தில் முதியவர் ஒருவர் நின்று கொண்டிருக்கிறார். நீ இருக்கையில் அமர்ந்திருக்கிறாய்.

-

............................................................

## 4. படங்களைக் கவனித்து போக்குவரத்து விதிகளைப் பற்றி கலந்துரையாடு.













- போக்குவரத்து விதிகள் பற்றிய தகவல்களை வழங்கவும்.
- போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவது குறித்து மாணவர்களை நடிக்கச் செய்து காண்பிக்கச் செய்யும்

சாலையில் போக்குவரத்து சீராக நடைபெறுவதற்காக போக்குவரத்து விதிகளும் குறியீடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த விதிமுறைகளையும், குறியீடுககளையும் அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

**5. உனது சுற்றுப்புறத்தில் உள்ள சாலையில் செல்லும் போது கீழ்க்காணும் குறியீடுகள் காணப்படுகிறதா என்பதை கவனித்து, அவற்றின் பொருளை அறிந்து கொள்ளுங்கள்.**

1) நில்




2) முன்னால் பள்ளி உள்ளது



3) செல்லஅனுமதிஇல்லை



4) பாலம்



5) இரயில்வே பாதை



6) வாகனங்கள் நிறுத்தத் தடை



7) வேகத்தடை



8) பாதசாரிகள் கடக்கும் வழி



9) முந்திச் செல்லத் தடை



10) ஒலி எழுப்பத் தடை



**6. உனக்குத் தெரிந்த போக்குவரத்து குறியீடுகளை அட்டைப்பலகை உதவியுடன் தயார் செய்து, உனது பள்ளி வளாகத்தில் வை.**

- போக்குவரத்து காவலர் ஒருவரைச் சந்தித்து நேர்காணல் செய்ய ஏற்பாடு செய்யவும்.
- போக்குவரத்து குறியீடுகளைக் கொண்ட அட்டைகளைத் தயார் செய்து விளையாடச் செய்யவும்.

**க. தி. 2**
**தி. 2.1**
**க. வி. 11**

# 13.அவசரகாலச் சூழலில் நடத்தை

அவசரகால சூழ்நிலை என்பது இயற்கை அல்லது மனிதர்களால் உருவாகும் எதிர்பாராத ஆபத்து ஆகும். இதில் நிலநடுக்கம், வெள்ளம், விபத்து, தீ விபத்து போன்றவை அடங்கும்.




**எனது செயல்**

**1. படத்தைக் கவனித்துக் கேள்விகளுக்குப் பதிலளி :**

1. மக்கள் ஏன் கூட்டமாக கூடியிருக்கிறார்கள்? ..............................
2. தொலைபேசியில் யாருக்கு அழைப்பு விடுத்திருப்பார்கள்? ..............................
3. எந்த வாகனம் வந்திருக்கிறது? ..............................
4. தீயணைப்புத் துறையின் அவசரத் தொலைபேசி எண் என்ன? ..............................
5. தீயணைப்புத் துறையினரை ஏன் அழைத்திருக்கிறார்கள்? ..............................

2. உங்களுக்குத் தெரிந்த இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்படும் பேரிடர்களின் பெயர்களை எழுதுக.

| இயற்கை பேரிடர் | மனிதர்களால் ஏற்படும் பேரிடர்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

3. அவசர காலங்களில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எழுதுக.

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

◈ அவசர காலத்தில் உதவும் முக்கிய தொலைபேசி எண்கள் :

காவல் துறை–100

தீயணைப்புத்துறை – 101

குழந்தைகள் உதவி மையம் – 1098




அவசர ஊர்தி – 102,108

• அவசரநிலை என்ற கருத்தை மாணவர்களுக்கு விளக்கவும். நிலநடுக்கம், வெள்ளம், சுவர் இடிந்து விழுதல் அல்லது விபத்து போன்ற பிற அவசர காலங்களில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைச் செய்து காட்டவும்.
• தீயணைப்புத்துறை மற்றும் அவசர ஊர்தி பணியாளர்களை நேரடியாக அழைத்து மாணவர்களுடன் கலந்துரையாடச் செய்யவும்.

க. தி. 2
தி. 2.2
க. வி. 12

# 14. தற்காப்பு: நல்ல தொடுதல்/கெட்ட தொடுதல்

## நல்ல தொடுதல்

எந்தத் தொடுதல் நமக்கு பாதுகாப்பையும், மகிழ்ச்சியையும் தருகிறதோ, அதுவே நல்ல தொடுதல் ஆகும்.







## கெட்ட தொடுதல்

எந்தத் தொடுதல் நமக்கு சங்கடமாகவும், பயமாகவும் அல்லது வெட்கமாகவும் உணர வைக்கிறதோ, அதுவே கெட்ட தொடுதல் ஆகும்.







- படங்களின் உதவியுடன் தற்காப்பு என்பதன் பொருளை மாணவர்களுக்கு விளக்கவும். நல்ல தொடுதல் கெட்ட தொடுதல் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டை புரிய வைக்கவும்.

### ◈ தற்காப்பிற்கான விதிகள்

ஆபத்தான அல்லது பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள பின் வரும் விதிகளை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.



1. உனது உடலின் மீது உனக்கு மட்டுமே முழு உரிமை உண்டு. உனது அனுமதியின்றி உன்னைத் தொட யாருக்கும் உரிமை இல்லை.



2. பெற்றோரிடம் எதையும் மறைக்காதே.




3. ஆபத்தான நேரங்களில் வேண்டாம் என்று சொல். யாராவது உன்னைத் தவறான முறையில் தொட முயற்சித்தால் பயப்படாமல் சத்தமாக வேண்டாம் என்று கத்து.



4. ஒருவர் உன்னைத் தொடுவதை இரகசியமாக வைக்கச் சொன்னால், அது நிச்சயமாக ஒரு கெட்ட தொடுதலாகும்



5. எல்லாத் தொடுதல்களும் எப்போதும் தவறானவை அல்ல.

6. பாதுகாப்பற்றதாக உணர்ந்தால் அங்கிருந்து ஓடிவிடு.
உடனடியாக பாதுகாப்பான இடத்திற்கோ அல்லது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடத்திற்கோ ஓடிச் சென்றுவிடு.





7. உனக்கு நம்பிக்கையானவர்களிடம் (அமமா, அப்பா, ஆசிரியர், காவல்துறை) நடந்ததைக் கூறு.




- நல்ல தொடுதல் மற்றும் கெட்ட தொடுதல் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடவும்.
- தற்காப்பை எவ்வாறு கடைபிடிப்பது என்பது பற்றி விவாதிக்கவும். பள்ளியின் முகப்புப் பகுதியில் சைல்ட் ஹெல்ப்லைன் எண், மனோதர்பன் மற்றும் டெலி-மானஸ் உதவி எண்களைக் காட்சிப்படுத்துவது கட்டாயமாகும்.
- பள்ளியில் உள்ள புகார் பெட்டி குறித்து மாணவர்களுக்குத் தகவல் தெரிவிக்கவும்.

க. தி. 2
தி. 2.3
க. வி. 13

# 15. நம்மைச் சுற்றியுள்ள தொழில்களை அறிவோம்

ஒவ்வொரு நபரும் ஏதேனும் ஒரு வேலை செய்து தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் வாழ்வாதாரத்தை ஈட்டுகிறார்கள். இதனை தொழில் என்கிறோம். அத்தகைய தொழில்களின் படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## எனது செயல்

**1. கீழ்க்காணும் படங்களை உற்று நோக்கி அந்தத் தொழில்களைப் பற்றிய தகவல்களைக் கூறுக.**















2. மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்கள் தவிர, பிற தொழிலாளர்களின் படங்களைச் சேகரித்து இங்கே ஒட்டவும்.

க. தி. 2
தி. 2.3
க. வி. 14

- பள்ளிக்கு அருகிலுள்ள தொழில் நடைபெறும் இடங்களுக்கு மாணவர்களை
- களப்பயணத்திற்கு அழைத்துச் செல்லவும். நேர்காணலுக்கு ஏற்பாடு செய்யவும்.

### ◈ சுற்றுப்புற பாரம்பரியத் தொழில்கள்

தலைமுறை தலைமுறையாகச் செய்யப்பட்டு வரும் தொழில்கள் பாரம்பரியத் தொழில்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**எனது செயல்**

**1. நான் என்ன செய்கிறேன்?**



..................................................



..................................................



..................................................



..................................................



..................................................



..................................................

**2. உனக்குத் தெரிந்த பல்வேறு பாரம்பரியத் தொழில்கள் பட்டியலைத் தயார் செய்.**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**3. உனது வீட்டிற்கு அல்லது பள்ளிக்கு அருகில் பாரம்பரியத் தொழில் நடைபெறும் இடத்திற்குச் சென்று பார்வையிடுக. அங்குள்ள தொழிலாளர்களிடம் அவரது வேலையைப் பற்றித் தெரிந்து கொள்ள கீழ்காணும் வினாக்களைப் பயன்படுத்துக.**

1) நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?
2) இதற்கு உங்களுக்கு என்னென்ன பொருட்கள் தேவைப்படும்?
3) உங்கள் தாத்தா-பாட்டியும் இதே தொழிலைச் செய்தார்களா?
4) நீங்கள் என்னென்ன பொருட்களைத் தயாரிக்கிறீர்கள்?
5) நீங்கள் தயாரித்தப் பொருட்களை எங்கே விற்பனை செய்கிறீர்கள்?

- **சேகரித்தத் தகவல்களை இங்கே பதிவு செய்க.**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

- படங்களைக் காட்டி அதிலுள்ள தொழில்களைப் பற்றி விளக்கவும்.
- இவற்றை ஏன் பாரம்பரியத் தொழில்கள் என்று அழைக்கிறோம் என்பதை விளக்கி, மற்ற பாரம்பரியத் தொழில்களைப் பற்றிய தகவல்களையும் வழங்கவும்.
- பள்ளிக்கு அருகிலுள்ள பாரம்பரியத் தொழில் நடைபெறும் இடத்திற்குச் சென்று அங்கிருப்பவர்களை நேர்காணல் செய்யுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தவும்.

க. தி. 3
தி. 3.1
க. வி. 15

### ◈ சுற்றுப்புற நவீனத் தொழில்கள்

மாறிவரும் காலத்திற்கும், தேவைகளுக்கும் ஏற்ப தொழில்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய புதிய வகை தொழில்கள் நவீன தொழில்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**எனது செயல்கள்**

**1. கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களிலுள்ள தொழில்களைக் கண்டறிந்து எழுதுக.**




..........................................................................................



..............................................





..........................................................

..........................................................



2. நவீனத் தொழில்களின் படங்களைச் சேகரித்து இங்கே ஒட்டவும்.

3. அருகிலுள்ள நவீனத் தொழில் நடைபெறும் இடத்திற்குச் சென்று பார்வையிடவும். அந்தத் தொழிலாளியிடம் கேட்பதற்கான வினாப்பட்டியலைத் தயார் செய்யவும். அவரிடம் நேர்காணல் செய்து, தகவல்களை இங்கே பதிவு செய்யவும்.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

க. தி. 3

தி. 3.1

க. வி. 16

- நவீனத் தொழில்கள் பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு வழங்கவும்.

## ◈ தொழில்களில் உள்ள வேறுபாடுகள்

### எனது செயல்

**1. கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்று நோக்கி, அவற்றில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிக.**

















- ஒரே வகையான இரு தொழில்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டை படங்களைக் கொண்டு மாணவர்களிடம் கேட்டறியவும்.

**2. சொற் புதிர்.**

**மாற்றி அமைக்கப்பட்ட எழுத்துக்களைச் சரியாகச் சேர்த்து, என்ன தொழில் என்பதைக் கண்டறியவும்.**

1. யா செ ர் ய் ள தி -
2. ச த ர் ச் -
3. லை ர் ஞ க -
4. வ போ த் க் ர கு து -
5. கா ச ர் ல ர வை க் -



**3. கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திலிருந்து தொழிலாளர்களின் பெயர்களைக் கண்டறியவும்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொ | றி | யா | ள | ர் | எ | டு | க | வ |
| ச | ய | வ | ல | ள | கா | வ | ல | ர் |
| ங | ன | க | ஆ | சி | ரி | ய | ர் | அ |
| ர | மீ | ற | ச | பா | இ | ய | சா | பா |
| ன | ன | ப | யா | ய | வி | வ | சா | யி |
| வ | வ | வி | ள | ஓ | ந | ர | ப | ம |
| ய | ர் | ர | ட் | த | ச் | ச | ர் | ய |
| ண | வ | ன | த | ன | கு | ய | வ | ர் |
| நெ | ச | வா | ள | ர் | ர | வ | ள | ழ |

க. தி. 3

தி. 3.1

க. வி. 17

- பாரம்பரிய மற்றும் நவீனத் தொழில்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை பற்றி மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லவும்.

# 16. உழைப்பின் உயர்வு

ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழில் செய்வதன் மூலம் பணம் ஈட்டுகின்றனர். நமக்கு தேவையான எல்லாவற்றையும் நாமே தயாரிப்பது சாத்தியமில்லை. அதற்காக நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே, ஒவ்வொருவரின் உழைப்பும் முக்கியமானதாகும்.

எடுத்துக்காட்டாக :

1. துப்புரவுத் தொழிலாளர்கள் குப்பைகளைச் சேகரிக்கிறார்கள்.
2. விவசாயிகள் தானியங்களை விளைவிக்கிறார்கள்.
3. ஆசிரியர் பாடம் கற்பித்து, மாணவர்கள் படிப்பதற்கு உதவுகிறார்.
4. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கிறார்கள்.
5. மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கிறார்கள்.

- **ஒவ்வொருவரின் உழைப்பும் நமது வாழ்க்கை சீராக நடைபெற உதவுகிறது.**
- **ஒவ்வொருவரின் வேலையையும் நாம் மதிக்க வேண்டும்.**

## எனது செயல்

1. உனது பள்ளியில் உதவியாளர்களாக பணியாற்றும் மாமா, மாமி, துப்புரவுத் தொழிலாளரகள் ஆகியோருக்கு வழங்குவதற்காக அழகிய காகிதப் பூங்கொத்து ஒன்றைத் தயாரித்து, அவர்களிடம் கொடுத்து உனது நன்றியைத் தெரிவிக்கவும்.
2. இராணுவ வீரர்களுக்கு அனுப்புவதற்காக ராக்கி ஒன்றை தயார் செய்து, அதில் அழகிய நன்றிக் கடிதத்தை எழுதி இணைக்கவும்.





- தொழிலாளர்களும் உதவியாளர்களும் வேலை செய்யாவிட்டால் என்ன நடக்கும் என்பதைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுங்கள்.
- வேலை மற்றும் வேலை செய்யும் உழைப்பாளிகளை மதிப்பது அவசியம் என்பதை மாணவர்களுக்குப் புரிய வைக்கவும்.
- பூங்கொத்து, ராக்கி, வாழ்த்து அட்டை தயாரிக்கச் சொல்லவும்.

க. தி. 3
தி. 3.1
க. வி. 18

# 17. கைத்திறன்

## வண்ணக் காகிதங்களால் ஆன பூங்கொத்து.

காகிதங்களைக் கொண்டு பல வகையான ஆழகிய வடிவமைப்புகளை உருவாக்க முடியும். நாம் நமது கைகளால் செய்த பூங்கொத்தை நண்பர்களுக்கு கொடுத்தால், அதை அவர்கள் நிச்சயம் விரும்புவார்கள். எனவே, வண்ணக் காகிதங்களைப் பயன்படுத்தி நாம் ஒரு பூங்கொத்தைத் தயாரிக்கப் போகிறோம்.



## எனது செயல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருட்களையும், கருவிகளையும் பயன்படுத்தி, படத்தில் காட்டப்பட்ட வரிசைப் படி செய்யவும்.

**தேவையான பொருட்கள் :** அட்டைத்தாள், வெள்ளை டிஷ்யு பேப்பர், பல்வேறு வண்ண மெல்லிய காகிதத் துண்டுகள், பசை, ஸ்கெட்ச் பேனா போன்றவை.




- பூங்கொத்து தயாரிப்பதற்குத் தேவையானப் பொருட்களைக் கொண்டு வருமாறு மாணவர்களிடம் கூறவும். மாதிரிப் படத்தில் உள்ளது போலவே அழகிய பூங்கொத்தைத் தயாரிக்க வைக்கவும்.

க. தி. 4
தி. 4.1
க. வி. 21.2

# 8. விலங்குகள் மற்றும் பறவைகள் சார்ந்த தொழில்கள்

பண்டைய காலத்திலிருந்தே மனிதன், விலங்குகள் மற்றும் பறவைகளுடன் நட்பு பாராட்டி, அவற்றை விவசாயம், போக்குவரத்து, உணவு மற்றும் இதர தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகிறான். கிராமங்களிலும் நகரங்களுக்கு அருகிலும் சில குடும்பங்கள் பசுக்கள், எருமைகள், கோழிகள் அல்லது ஆடுகளை வளர்த்துத் தெழில் செய்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் தங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்தைப் பெறுகிறார்கள் நமக்கு அன்றாடம் கிடைக்கும் பால், முட்டை, தேன் மற்றும் இதர உணவுப் பொருட்கள் விலங்குகளிடமிருந்தே கிடைக்கின்றன. இவைகளை விற்பனை செய்வதன் மூலம் பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்றன. உதாரணமாக : பால் பண்ணைத் தொழில், கோழி வளர்ப்பு, தேன் விறபனை போன்றவை.

## எனது செயல்

**1) கீழே விலங்குகள் மற்றும் பறவைகளின் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. படங்களைக் கவனித்து, அந்த விலங்குகள்-பறவைகளால் நமக்குக் கிடைக்கும் பயன்கள் எழுதுக.**

| விலங்கு/பறவை படம் | பயன்கள் |
|---|---|
|  | .................................................. |
|  | .................................................. |
|  | .................................................. |
|  | .................................................. |

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |

2. உனது பகுதியில் உள்ள விலங்குகளைக் கவனித்து அவற்றின் பயன்களைக் கூறுக.

1) நாய் - ..........

2) பூனை - ..........

3) காளை - ..........

4) மண்புழு - ..........

5) கழுதை - ..........

**விலங்குகள் மற்றும் பறவைகள் சார்ந்த தொழில்கள்.**

**3) கீழ் கண்ட படங்களைக் கவனித்து, அவை குறித்து கூடுதல் தகவல்களைக் கூறுக.**











**4. உனது பகுதியில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் சார்ந்த தொழில்களை நேரில் சென்று பார்வையிடுக.**

**பார்வையிட வேண்டிய இடங்கள் :**

**1) பால் பண்ணை/டையரி  2) வீட்டுக்கோழி வளர்ப்பு/கோழிப்பண்ணை**
**3) ஆடு அல்லது செம்மறி ஆடு வளர்ப்புப் பண்ணை 4) தேனி வளர்ப்பு மையம்**

**பார்வையிட்ட பின்னர், பின்வரும் வினாக்களின் அடிப்படையில் தகவல்களை எழுதுக.**

- எந்தெந்த விலங்குகள் மற்றும் பறவைகள் வளர்க்கப்படுகின்றன? அவற்றின் பெயர்களை எழுதுக?

  ........................................

- அவற்றிற்கு என்ன உணவு வழங்கப்படுகிறது?

  ........................................

- அவை எவ்வாறு பராமரிக்கப்படுகின்றன?

  ........................................

- எந்த விலங்கிலிருந்து என்ன பொருட்கள் கிடைக்கின்றன என்பதைக் கவனித்து எழுதுக.

  ........................................

- அந்தப் பொருட்கள் எவ்வாறு சேமிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன?

  ........................................

- உனக்கு பிடித்த தொழில் எது? ஏன்?

  ........................................

**5. உனது பகுதியில் அல்லது கிராமத்தில் என்னென்ன தொழில்கள் உள்ளன என்று எழுதுக :**

........................................

........................................

**6. பின் வரும் குறிப்புகளை பயன்படுத்தி, உனது பகுதியில் உள்ள ஒரு தொழிலாளியைப் பற்றிய தகவல்களை எழுதுக.**

**குறிப்புகள் :**
- தொழிலாளியின் பெயர்
- அவர் என்ன வேலை செய்கிறார்
- எப்போதிலிருந்து
- அந்த வேலையின் பயன் என்ன?
- குடும்பத்தில் யார் யாரெல்லம் இந்தத் தொழிலுக்கு உதவுகிறார்கள்?

7. பொருத்துக : விலங்குகள் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் பொருட்கள்.

| அ | விடைகள் | ஆ |
|---|---|---|
| பசு | | தேன் |
| தேனீ | | கம்பளி |
| கோழி | | பால் |
| செம்மறி ஆடு | | முட்டை |



- சுற்றுப்புறத்தில் காணப்படும் விலங்குகள் மற்றும் பறவைகள் சார்ந்த தொழில் செய்யும் இடங்களுக்கு மாணவர்களைக் களப்பயணம் அழைத்துச்செ ல்ல வேண்டும்.
- களப்பயணம் ஏற்பாடு செய்வது அவசியமாகும்.

க. தி. 3
தி. 3.2
க. வி. 20

# 19. மீன்பிடித் தொழில்

ஆறுகள், கால்வாய்கள், அணைகள், குளங்கள், கடல் மற்றும் தனியார் குளங்களில் மீன்கள் காணப்படுகின்றன மீன்கள் பிடிப்பதை மீன்பிடித் தொழில் என்று கூறுகிறோம். மீன்களைப் பிடிக்க இயந்திரக் கருவிகள், மற்றும் பல்வேறு வகையான வலைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த முறையில், ஒரே நேரத்தில் பல வகையான மற்றும் அதிக அளவிலான மீன்கள் கிடைக்கின்றன.

**பல்வேறு வகையான மீன்கள் :**



கட்லா மீன்



மிருகல் மீன்



மடவை மீன்



வௌவால் மீன்



வஞ்சிரம் மீன்



பால் மீன்

மீன்கள் மனிதர்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவாகும். மீன்கள் விரைவில் கெட்டுப்போகும் தன்மை கொண்டவை. மீன்களை அதிக நாட்கள் கெடாமல் வைத் திருக்க அவை பனிக்கட்டியில் சேமிக்கப்படுகின்றன. புதிய மீன்கள், உலர்த்தப்பட்ட மீன்கள் மற்றும் உப்பிலிடப்பட்ட மீன்கள் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. புதிய மீன்களுக்கு சந்தையில் நல்ல விலை கிடைக்கும். மீன்பிடித் தொழிலின் மூலம் நேரடி வருமானமும், உள்ளூரில் வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

**எனது செயல்**



**1. உனக்குத் தெரிந்த மீன்களின் பெயர்களைக் கூறு.**

க. தி. 3
தி. 3.2
க. வி. 20

• அருகிலுள்ள மீன் சந்தைக்குச் சென்று பார்வையிடவும். பல்வேறு வகையான மீன்கள் குறித்த தகவல்களைச் சேகரிக்க மாணவர்களுக்கு அறிவுறுத்தவும்.

## 2. அலங்காரம்

கொடுக்கப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்தி படங்களின் வரிசைப்படி அலங்கார வேலையைச் செய்யவும்.

தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் : வெள்ளைக் காகிதம், பென்சில், தானியங்களின் தோல்கள் அல்லது ஓடுகள், வண்ணங்கள், தூரிகை.

















- ஓடுகள் மற்றும் தோல்களைக் கொண்டு பல்வேறு வகையான அலங்காரப் பொருட்களைத் தயாரிக்க மாணவர்களுக்கு வழிகாட்டவும்.

# 20. அத்தியாவசியத் திறன்கள்

ஒரு வேலையைத் திறம்படவும், நேர்த்தியாகவும் செய்யும் ஆற்றலே திறன் எனப்படும். ஏதோ ஒன்றை வெறுமனே அறிந்திருப்பது மட்டும் போதாது. அதனைப் பயன்படுத்தி செயலை சிறப்பாகச் செய்து முடிப்பதே அவசியமாகும்.

- உதாரணமாக : கணினியைப் பற்றிய தகவல்களைப் படிப்பது என்பது அறிவு, ஆனால் அதனை நேரடியாகப் பயன்படுத்தி வேலைகளைச் செய்வது திறன் ஆகும்.
- கைத்திறன் : கைகளின் உதவியுடன் பல்வேறு வேலைகளைத் துல்லியமாகச் செய்யும் ஆற்றல் கைத்திறன் ஆகும். வீட்டு வேலைகள் செய்தல், தையல் வேலை, கைவினைப் பொருட்கள் உருவாக்குதல் போன்றவை கைத்திறன்களுக்கு சான்றாகும்.





- பேச்சுத்திறன் : மற்றவர்களுடன் பேசும் போது நமது எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் தகவல்களை தெளிவாகவும், திறம்படவும் வெளிப்படுத்தும் ஆற்றல்.

**தொழில்நுட்பத்திறன் :**

- ஒரு குறிப்பிட்ட கருவி, இயந்திரம் அல்லது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு வேலையைத் துல்லியமாகச் செய்து முடிக்கும் ஆற்றல்.



**திறன்களின் முக்கியத்துவம் :**

- சுயசார்பு : நாம் மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை
- தன்னம்பிக்கை : எந்த ஒரு வேலையும் சிறப்பாகச் செய்யத் தொடங்கும் போது நமது தன்னம்பிக்கை அதிகரிக்கிறது.

படைப்பாற்றல் : புதிய கற்பனைகள் தோன்ற புதிய செயல்களைச் செய்யும் ஆற்றல் உருவாகுதல்.

க. தி. 4
தி. 4.1
க. வி. 21

- திறன்களின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்குப் புரிய வைத்தல்.

## ◈ கைத்திறன் : பரிசுப் பெட்டி

பண்டிகைகள், பிறந்தநாள், அல்லது வேறுபல முக்கிய நிகழ்வுகளின் போது நாம் நண்பர்களுக்குப் பரிசுகளை வழங்குகிறோம். இந்தப் பரிசை நாம் கைகளால் செய்த அழகான பரிசுப் பெட்டியில் வைத்துக் கொடுக்கும் போது, அதன் மதிப்பு உயர்கிறது எனவே, அட்டைத்தாள் ஒன்றைப் பயன்படுத்தி இன்று நாம் ஒரு சிறிய பரிசுப் பெட்டியைத் தயாரிக்கக் கற்றுக் கொள்வோம்.

### எனது செயல்

**1. கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி, படத்தில் காட்டியுள்ள வரிசைப்படிச் செய்யவும்.**

தேவையான பொருட்கள் மற்றும் கருவிகள் : அட்டைத்தாள், கத்தரிக்கோல், பசை, ஸ்கெட்ச், பேனா போன்றவை.

செய்முறை :



1


2


3


4


5


6


7


8




9



10



11



12



13



14



15



பரிசுப் பெட்டியை மேலும் அழகுபடுத்த ஸ்டிக்கர்கள், மணிகள் போன்றவற்றைத் தேவைக்கேற்பப் பயன்படுத்தவும்

**பாதுகாப்பு :**

- கத்தரிக்கோலை மிகவும் பாதுகாப்பாக பயன்படுத்தவும்.

- பரிசுப்பெட்டி செய்வதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருமாறு மாணவர்களிடம் கூறுதல்.
- பல்வேறு அளவுகளில் பெட்டிகளைச் செய்யும் போது மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கவும்.

## 2. இலை மற்றும் பூக்களால் அலங்காரம்.

பல்வேறு வகையான இலைகள் மற்றும் பூக்களைக் கொண்டு அழகான உருவங்கள் உருவாக்க முடியும். இலைகள் மற்றும் பூக்களிலிருந்து கோலங்கள், மாலைகள், தோரணங்கள் மற்றும் பூச்சரங்கள் தயாரிக்கலாம்.

கீழே, இலை மற்றும் பூக்களால் செய்யப்பட்ட கோலங்கள் மற்றும் அலங்காரங்களின் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உனக்கு பிடித்தமான இலை இல்லது பூ அலங்காரத்தை அல்லது பூக்கோலத்தை உருவாக்கி மகிழவும்.

















## ◈ உரையாடல் திறன் :

நமது அன்றாட வாழ்வில், நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு நபர்களுடன் பேசுகிறோம். ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதை உரையாடல் என்கிறோம். உரையாடல் சிறப்பாக அமைய, முறையான வகையில் பேசுவது அவசியமாகும். இதனை உரையாடல் திறன் என்கிறோம்.




### எனது செயல்கள்



**1. பின் வரும் உரையாடல்களைப் படித்து, அதில் எது சரியான முறை மற்றும் எது தவறான முறை என அடையாளம் காண்க :**

- முதல் நண்பன் : உன்னிடமுள்ள கதைப் புத்தகத்தை எனக்கு வாசிக்க தருவாயா
- இரண்டாம் நண்பன் : ஆம், இதோ எடுத்துக் கொள்?
  முதல் நண்பன் : நன்றி!
- பாட்டி : பெண்ணே, எனக்கு இந்த முகவரியைச் சொல்கிறாயா? ..............................

  சிறுமி : முடியாது! நான் வேலையில் இருக்கிறேன்
  வேறு யாரிடமாவது கேளுங்கள் (சலிப்பான குரலில்)
- பெண் : நான் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக வந்திருக்கிறேன். வீட்டில் .............................. பெரியவர்கள் யாராவது இருக்கிறார்களா?
  சிறுவன் : இல்லை மாமி, இப்போது அம்மா-அப்பா வீட்டில் இல்லை.
- பெண் : நீ தகவல்ககளைச் சொல்கிறாயா?
  சிறுவன் : (பணிவுடன்) இல்லை மாமி, தயவு செய்து பிறகு வாருங்கள்.

..............................

- ஆசிரியர் : மாணவர்களே, நாம் ஒரு பாலர்சபை நடத்த வேண்டும்.
  சிறுமி : அப்படியா ஐயா? பாலர்சபையை எப்போது நடத்தலாம்.
  ஆசிரியர் : அடுத்த வாரம் நடத்தலாமா?
  சிறுவன் : சரி ஐயா! அடுத்த வெள்ளிக்கிழமை நடத்தலாம்.
  ஆசிரியர் : அப்படியானால்... பாலர் சபைக்கான வேலைகளுக்குப் பொறுப்பேற்க யாரெல்லாம் தயார்?
  சிறுமி : நான் தயார் ஐயா.
  சிறுவன் : நானும் தயார் ஐயா.

........................................

**2. சரியான உரையாடலை எழுதுக.**

- வாடிக்கையாளர் மற்றும் கடைக்காரர் இடையிலான உரையாடல்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

- வீட்டு விருந்தினர்களுடன் உரையாடல்

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

- பல்வேறு தலைப்புகளில் உரையாடலைத் தயார் செய்யவும்.

க. தி. 4
தி. 4.1
க. வி. 23

## தொழில்நுட்பத் திறன்

பல்வேறு கருவிகளின் உதவியுடன் ஒரு வேலையை நேர்த்தியாகச் செய்யும் திறனே தொழில்நுட்பத் திறன் எனப்படும்.

## தொழில்நுட்பத் திறனின் முக்கியத்துவம்.




### எனது செயல்



1. வீட்டில் உள்ள தொழில்நுட்பக் கருவிகளின் பட்டியலைத் தயார் செய்.

..............................................................................................................

..............................................................................................................

2. அன்றாட வாழ்க்கையில் தொழில்நுட்பத் திறனைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கூறு.

..............................................................................................................

..............................................................................................................

- உரையாடல்கள் மூலம் தொழில்நுட்பத் திறனின் முக்கியத்துவத்தைப் புரிய வைக்க வேண்டும்.

க. தி 4
தி. 4.1
க. வி. 24

## தொழில்நுட்பக் கருவிகள்

அன்றாட வாழ்வில் நாம் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்திப் பல வேலைகளைச் செய்கிறோம். அவற்றில் சிலவற்றின் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**3. பின்வரும் படங்களைக் கவனித்து, படங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள கருவிகளைப் பட்டியலிட்டு அவற்றைப் பற்றிஉரையாடுக.**



கத்தரிக்கோலால் காகிதம் வெட்டுதல்



கோல அச்சுகளைப் பயன்படுத்தி கோலம் போடுதல்



ஊசி மற்றும் நூலின் உதவியால் மாலை தொடுத்தல்



கத்தியால் காய்கறிகளை நறுக்குதல்



தூரிகையினால் அகல் விளக்குக்கு வண்ணம் தீட்டுதல்

# 21. தொழில் நுட்ப மாற்றங்கள்

மாறிவரும் காலத்திற்கு ஏற்ப தொழில்நுட்பத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

## எனது செயல்

**1. பின்வரும் படங்களைக் கவனித்து, தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி கலந்துரையாடுக.**



உரல்




மிக்ஸி



தொலைபேசி



திறன்பேசி



சாதாரன தொலைக்காட்சி



எல்.இ.டி. தொலைக்காட்சி



சதாரண கரும்பலகை



ஊடாடும் பலகை



சாதாரண கணினி



மடிக்கணினி



விறகு அடுப்பு



எரிவாயு அடுப்பு



பழைய மிதிவண்டி



கியர் மிதிவண்டி

2. இவை தவிர ஒரே வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டு தொழில் நுட்ப மாற்றங்கள் ஏற்பட்ட இது போன்ற பொருட்களின் பட்டியலைத் தயார் செய்க.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

- தொழில்நட்பத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடவும்.

க. தி 4
தி 4.1
க. வி. 24

# 22. கணினி பாகங்களின் அறிமுகம்

இன்றைய காலத்தில் பல இடங்களில் கணினிக்ள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக : பள்ளி, அலுவலகம், வங்கி, மருத்துவமனை போன்றவை.

கணினி ஒரு மின்னனு இயந்திரம் ஆகும். இதில் தகவல்களைச் சேமிக்கவும், செயலாக்கவும் மற்றும் தேவைப்படும் போது சேமித்த தகவல்களை மீண்டும் பெற முடியும். கணினியில் பல்வேறு பாகங்கள் உள்ளன. கீழ்கண்ட படங்களில் கொடுக்கப்பட்டுள்ள படி, கணினியின் பாகங்களையும், அவற்றின் பயன்களையும் கவனிக்கவும்.



**மானிட்டர்**

பயன் : திரையில் தகவல்களைக் காண்பதற்கு



**கீ போர்ட்**

பயன் : எண்கள், எழுத்துகள் மற்றும் குறியீடுகளைத் தட்டச்சு செய்வதற்கு



**மவுஸ்**

பயன் : தகவல்களைத் தேர்ந்தெடுக்கவும், திரையை நகர்த்தவும் பயன்படுகிறது.



**சி.பி.யு.**

பயன் : தகவல்களை சேமித்து வைப்பதற்கு



**பிரிண்டர்**

பயன் : தகவல்களைத் தாளில் அச்சிடுவதற்கு



**ஸ்பீக்கர்**

பயன் : ஒலிகளைக் கேட்பதற்குப் பயன்படுகிறது

## எனது செயல்



**1. கணினி பாகங்களின் பெயர்கள் இந்தச் சொல் புதிரில் மறைந்துள்ளன. அந்தப் பெயர்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ஸ் | பீ | க் | க | ர் |
| கீ | மா | னி | ட் | ட | ர் |
| போ | ங | ச | ன் | ம | சி |
| ர் | ர | ரி | வு | க | பி |
| ட | பி | ஸ் | வ | ய | யு |
| வ | பி | ரி | ண் | ட | ர் |

1) ............................

2) ............................

3) ............................

4) ............................

5) ............................

**2. கீழே கொடுக்கப்பட்டுள்ள கீ-போர்ட் படத்தில் எண்கள் மற்றும் எழுத்துகளை கீ-போர்டில் உள்ள வரிசைப்படி எழுதுக.**



- கணினியின் பல்வேறு பாகங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும்.
- கணினி பாகங்களின் பயன்களை மாணவர்களுக்கு விளக்கவும்

க. தி 4

தி. 4.1

க. வி. 24,3,4

◈ **கணினியை தொடங்குதல் மற்றும் நிறுத்துதல்.**

கணினியைப் பயன்படுத்துவதால் பல வேலைகள் எளிமையாகவும், விரைவாகவும் முடிகின்றன. எனவே, கணினியைப் பயன்படுத்த, அதை எவ்வாறு சரியாகத் தொடங்குவது மற்றும் நிறுத்துவது என்பதைப் பற்றிய அறிவு அவசியமாகும்.

**எனது செயல்**



**1. கணினியைத் தொடங்கும் மற்றும் நிறுத்தும் முறையைக் கவனித்து, நீயும் செய்து பார்.**



- **கணினியைத் தொடங்குதல்**

1. கணினியின் மின் இணைப்பில் உள்ள சுவிட்சை அழுத்தவும்
2. சி.பி.யு. (CPU) மற்றும் மானிட்டரில் உள்ள பவர் பட்டனை அழுத்தவும்
3. இப்போது மானிட்டர் தொடங்கும் சிறிது நேரம் காத்திருந்தால் திரையில் டெஸ்க்டாப் தோன்றும்.




- **கணினியை நிறுத்துதல்**

1. கணினியைத் திரையின் கீழ் இடது மூலையில் உள்ள ஸ்டார்ட் ஐகான் மீது மவுஸ் அம்புக்குறியை கொண்டு செய்யவும்.
2. அங்கு உனக்கு பவர் ⏻ என்ற விருப்பம் தெரியும்.
3. மவுஸின் இடது பக்க பட்டனை அழுத்தி, அந்த பவர் விருப்பத்தைக் கிளிக் செய்யவும்.
4. அதன் பிறகு உனக்கு ஸ்லீப் (sleep), ஷட் டவுன்(shut down) மற்றும் ரீஸ்டார்ட்(Re-start) ஆகிய மூன்று விருப்பங்கள் தோன்றும்.
5. மவுஸின் இடது பட்டனைப் பயன்படுத்தி ஷட்டவுன் (shut down) என்பதைக் கிளிக் செய்யவும் - கணினி முழுமையாக நிற்கும் வரை காத்திருக்கவும்.

- **நினைவில் கொள்க :**

> கணினியைத் திடீரென அணைக்கக் கூடாது எப்போதும் ஷட் டவுன் முறையை பயன்படுத்தியே அணைக்க வேண்டும.

> எப்போதும் ஆசிரியர்கள் அல்லது பெற்றோரின் உதவியுடன் கணினியைப் பயன்படுத்தவும்.

> ஆசிரியர்கள் அல்லது பெற்றோரின் அனுமதியின்றி கணினியில் எந்தத் தகவல்களையும் பதிவிறக்கம் செய்யவோ அல்லது பகிரவோ வேண்டாம்.

- கணினி அறையில் மாணவர்களைக் கொண்டு, கணினியைத் தொடங்கும் மற்றும் நிறுத்தும் செயல்பாட்டை செய்து காட்டவும்..

## எனது பக்கம்

**நான் கிராமத்தில் மாமாவுடன் திருவிழாவிற்கு சென்றிருந்தேன் அங்கே பல தொழில்களைப் பார்க்க முடிந்தது. கீழே உள்ள படத்தில் அத்தொழில்களைத் தேடுக.**



## என் சுற்றுப் புறத்தில்  உள்ள சிலத் தொழில்கள்

**என் சுற்றுப்புறத்தில் உள்ள தொழில்களை கண்டுபிடிக்கவும்.**











அன்பு குழந்தைகளே!

யாராவது ஒருவர் உங்களை தகாத றையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்கக் கூடாது. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.

1. உங்களை நீங்களே குற்றம் சொல்லாதீர்கள்.
2. நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.
3. நீங்கள் போக்சோ மின் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கும் தெரிவிக்கலாம்.

நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம்.
நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை, ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.




இந்த பொத்தானை அழுத்தவும்.

**POCSO e-box ncpcr@gov.in–ல் கிடைக்கும்**

நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற றையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக் கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால்...




துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்யற்சியாகும்.

नए समाज की ओर
Towards a new dawn

- மாணவர்கள் 'நல்ல தொடுதல்' மற்றும் 'தீய தொடுதல்' ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொள்வது அவர்களின் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியமாகும். வயது வாரியாக அவர்களுக்கு வழங்க வேண்டிய உடல் மற்றும் உணர்வு ரீதியான வழிகாட்டுதல்களை வழங்கவேண்டும்.

மகாராஷ்டிர மாநில பாடநூலாக்கம் மற்றும்  கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே.

कार्यशिक्षण इयत्ता तिसरी (तमिळ माध्यम)

₹ 61.00

